THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE LAY PUBLIC

649

"வக்கீல்"

MADRAS

649
4.57.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

இந்த இதழில்

நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தால்

இன்று அமுலில் இருக்கும் கண்ட்ரோல் உத்தரவுகள்

வருமான வரி வழக்கு

ஜாகை - வாடகை விதிகள்

கிராமப் பஞ்சாயத்து அறிக்கைகள்

கேள்வி - பதில்

விபரம் உள்ளே பார்க்கவும்

THE "VAKIL" — ஆகஸ்டு - 1951 — 4 அணா

PATENT REGISTERED NO. 27878.

ரோலிங் ஸ்டோன்.

தண்ணீர்க் கரைவைத்த தானியங்களைக் கைபடாமல் மாவாக
அரைக்கும் எலெக்டிரிக் கல் உரல்.

ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங்.

சிறந்த சிற்றுண்டி உயர்ந்த உணவு திருப்தியான கவனிப்பு தங்குவதற்கு
வசதியான அறைகளுடன் உள்ளது.

புரொப்ரைட்டர்ஸ்:

A. R. வேணுகோபால அய்யங்கார் & சன்.

ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங் & ரோலிங்ஸ்டோன்
தயாரிப்பாளர்கள்

மாயவரம் ஜங்ஷன்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி சோப்

தயாரிப்பவர்:—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்.

ஸ்தாபிதம் 1942 — தந்தி "லலிதாலயா"

உயர்ந்த ஆயுர்வேத சிகிச்சைக்கும்
மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை
கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்: 49, மூர்த்தி செட்டித் தெரு.
கிராஞ்சு: 73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "பேலவந்"

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி.

ஜெயராம் காயகல்பி லேகியம் [Regd.]

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.
தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கை கால்வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டி சுரம், மூலரோகம் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0.

வி. பி. பி. செலவு தனி.

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்.

தயாரிக்குமிடம்:—

ஜெயராம் வைத்தியசாலை

28. காசிவிஸ்வநாதர் மேல வீதி :: கும்பகோணம்.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில் } ரூ. 3—0—0

விசேஷ வருட சந்தா ரூ. 6—0—0
[12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே சப்ளிமெண்டுகளாக வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக]

ஷ வெளிநாடு ... ... ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே சப்ளிமெண்டுகளாக வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதார்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பலாம்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 ஆகஸ்டு 1951 இதழ் 8

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் - செய்திகளும்	
நிலச் சீர்திருத்தச் சட்டம் வருமா?	2
எழுத்துச் சீர்திருத்தம் வந்தே விட்டது!	2
புதிய சட்டங்கள்	3
அத்தியாவசிய உத்தியோகங்களில் வேலை நிறுத்தத் தடை—அவசர மத்தியச் சட்டம்	5
ஜாகை — வாடகை கட்டுப்பாடு சட்ட விதிகள்	5
உலையில்	
சென்னை நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் சிபார்சுகள்	9
வழக்கும் - தீர்ப்பும்	12
கண்ட்ரோல் உத்தரவுகள்	16
இன்று அமுலில் இருக்கும் கட்டுப்பாடு உத்தரவுகள்	17
கிராம பஞ்சாயத்துச் சட்ட அறிக்கைகள்	18
கேள்வி - பதில்	21
இதுவும் உதவும்	
கூட்டு வியாபாரம்	23

"வக்கீல்" பிரசுரங்கள் (நெ. 8) "விற்பனை வரி" என்ற "வக்கீல்" சப்ளிமெண்ட் விசேஷ சந்தாதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

187710.
சென்னை-600 008

வக்கீல்

வாழிய செந்தமிழ்!   வாழ்க நற்றமிழர்!

மலர் 3   ஆகஸ்டு 1951   இதழ் 8

குறிப்புகளும் - செய்திகளும்

நிலச் சீர்திருத்தச் சட்டம் வருமா?

இம்மாகாணத்திலுள்ள நிலச்சுவான்தார்கள், மிராசுதார்கள், குத்தகைதார்கள், விவசாயிகள் இவர்களின் மனதைக் குழப்பிவரும் ஓர் சம்பவம் சென்றமாதம் ஏற்பட்டது. இதுதான் சென்னை நிலச்சீர்திருத்தச் சட்டக்கமிட்டி ரிப்போர்ட்டின் பிரசுரம். இக்கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறபடியே ஒரு சட்டம் வருமா? அப்படியானல் எப்பொழுது வரும்? அது வந்தால் நம்மை எப்படிப் பாதிக்கும்—என்ற ரீதியில் நிலமுள்ளவர்கள் பலர் சிந்திக்கின்றனர். நிலச்சீர்திருத்தக் கமிட்டி ரிப்போர்ட்டில் தனி நபரின் நில உரிமைகளைப் பாதிக்கக்கூடிய அம்சங்களை மட்டில் தொகுத்து இந்த இதழில் "உலையில்" என்ற பகுதியில் விளக்கப்பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவும். சொந்த நிலமே இல்லாவிட்டாலும், ஊரில் இல்லாத பல பட்டாதார்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து தொழில் நடத்துபவர்களும் இனி அப்படிச் செய்ய முடியாது போகலாம். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள சில ஜீவாதார உரிமைகளை மறந்தோ பொருட்படுத்தாமலோ இக் கமிட்டியின் சிபார்சுகள் பல இருக்கின்றன. இவைகளைப்பற்றி அடுத்த இதழில் விளக்கப்படும். அத்துடன் இக்கமிட்டியின் சிபார்சுகளைப்பற்றி நேயர்கள் சுருக்கமாய் எழுதும் அபிப்பிராயங்களும் அடுத்து வரும் "வக்கீல்" இதழ்களில் பிரசுரம் செய்யப்படும்.

எழுத்துச் சீர்திருத்தம் வந்தே விட்டது!

நிலங்கள் சம்பந்தமான சீர்திருத்தங்கள் வந்தாலும் வராவிட்டாலும், தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு பெரிய சீர்திருத்தத்தைச் சென்னை (=னை) சர்க்கார் அமுலுக்கே கொண்டு வந்து விட்டனர். அதுதான் தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம். இதற்காக நியமிக்கப்பட்ட ஒரு விசேஷ கமிட்டியாரின் சிபார்சுகளை (=ளை) ச் சென்னை (=னை) சர்க்கார் ஏற்றுக்கொண்டதுடன் உடனடியாக அமுலுக்கும் கொண்டுவந்து விட்டனர். இன்று உள்ள தமிழ் எழுத்துக்கள் 133. இச்சீர்திருத்தப்படி இனி 91 எழுத்துக்கள்தான் இருக்கும். இனி, சர்க்கார் ரிகார்டுகளிலும், பள்ளிக் கூடப் பாடப்புத்தகங்களிலும் சீர்திருத்தப்பட்ட தமிழ் எழுத்துக்கள்தான் இருக்கும். இச்சீர்திருத்தப்பட்ட எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட பாட புத்தகங்களை (=ளை) த்தான் சர்க்கார் அங்கீகரிப்பார்கள். இச்சீர்திருத்தத்தைத் தமிழ் அன்பர்கள் குறை கூறுவதற்கு ஒன்றுமில்லை. பழைய எழுத்தில் சிறு குழந்தைகளின் பாடப் புத்தகங்களை (=ளை) ஏராளமாக ஏற்கனவே அச்சடித்து வைத்துக்கொண்டு மே, ஜூன் மாதங்களில் ஜில்லாபோர்டு மெம்பர்களை =(ளை) யும் முனிசிபல் கவுன்சிலர்களை (=ளை) யும் பேட்டி கண்டு இப்புத்தகங்களைக் குழந்தைகள் மீது சுமத்தத் திட்டமிட்ட 'பப்ளிஷர்'கள் தான் கொஞ்சம் கஷ்டமடையலாம்!

(குறிப்பு:-சீர்திருத்தப்பட்ட எழுத்துக்களை (=ளை) த்தான் உபயோகித்து மேற்கண்ட பாரா எழுதப்பட்டிருக்கிறது. மக்களை (ளை)த் திணற அடிக்கும் மாறுதல்கள் ஒன்றுமில்லை (=லை) என்பது போற்றத்தக்கதே.)

புதிய சட்டங்கள்
சுருக்கியும்-வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்செட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

31. ஹைதராபாத் பொதுக் கம்பெனிகள் (லாபவரம்பு) ரத்துச் சட்டம். The Hyderabad Public Companies—Limitation of Dividends—Repealing Act 1951 (13-5-1951).

32, 33 ஆவது சட்டங்கள் 1951 ஜூலை "வக்கீல்" இதழில் சொல்லப்பட்டிருக்கின்றன.

34. அஸ்ஸாம் ரைபிள்ஸ் திருத்தச் சட்டம். Assam Rifles Amendment Act 1951 (17-5-1951).

35. துறைமுகச் சட்டத்திருத்தம். The Port Trusts and Ports Amendment Act 1951 (9-6-1951). துறைமுகங்கள் சம்பந்தமான சென்னை, பம்பாய், கல்கத்தா சட்டங்களைத் திருத்தி அமைக்கும் சட்டம்.

38. இந்திய கொப்பரைச் சட்டத் திருத்தம். The Indian Boilers Amendment Act 1951. (25—6—1951) இந்தியக் கொப்பரைச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

39. கனமூட்டைக் குறிச் சட்டம் The Marking of Heavy Packages Act 1951. (25—6—1951). சர்வதேச உடன்படிக்கையின்படி 2204·6 பவுண்டு அல்லது 26·8 ஸ்டாண்டர்ட் மணுவுக்குமேல் கனமுள்ள மூட்டைகளை (Heavy Packages) கடல் அல்லது உள்நாட்டு கால்வாய்கள் மூலம் அனுப்புகிறவர்கள், அம்மூட்டைகளின் மேல், அதன் மொத்த எடையை யாவருக்கும் தெரியும்படியும் அழியாமலிருக்கும்படியும் குறிக்கவேண்டும். இதை மீறுகிறவர்களுக்கு ரூபாய் 500 வரை அபராதம் விதிக்கப்படலாம். இச்சட்டம் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தினத்தன்று முதல் அமுலுக்கு வரும்.

40. தொழில் தகராறு சட்டத் திருத்தமும்-தாற்காலிகஷரத்துக்களும்-கொண்ட சட்டம். The Industrial Disputes Amendment and Temporary Provisions Act 1951. (26—6—1951) தொழில் தகராறு சட்டத்தில், டிரிபுனலின் அங்கத்தினர்களின் யோக்கியதாம்சம் சம்பந்தமாயும், டிரிபுனல் நடவடிக்கைகளில் ஒரு அங்கத்தினர் கலந்து கொள்ளாவிட்டாலும் புது அங்கத்தினர் சேர்த்து கொண்டாலும் அதன் நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்தப்படுவது சம்பந்தமாயும், தொழில் தகராறு சட்டத்தின் செக்ஷன் 7, 8 இவைகள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பாங்கு சிப்பந்திகளுக்கு 1951 மார்ச்சு மாதத்தில் கொடுக்கப்பட்ட சம்பளம் பஞ்சப்படி வாடகை முதலிய எவ்வித வசதிகளையும் குறைக்கக் கூடாதென்றும் பாங்கு 'அவார்டு'ப்படியும், டிரிபுனல் முன் பாங்குக்காரர்களும் சிப்பந்திகளும் செய்துகொண்ட ஏற்பாட்டுப்படியும் நடப்பது சட்ட விரோதமாகாது என்றும் இச்சட்டத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது.

[குறிப்பு:- 'பாங்கு அவார்டு' செல்லாதென்று ஏற்பட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால் பாங்கு சிப்பந்திகளுக்கு பாதகம் ஏற்படாமல் தடுக்கவே இச்சட்டம்.]

41. ராஜ்காட் சமாதிச் சட்டம். The Rajghat Samadhi Act 1951. (29-6-1951) டில்லியில், யமுனா நதியின் மேற்குக் கரையில் மகாத்மா காந்தியடிகள் தகனம் செய்யப்பட்ட இடமாகிய ராஜ்காட் என்ற இடத்தையும் அதைச் சேர்ந்த சுமார் 45 ஏகர் நிலங்களையும் அதிலுள்ள ஞாபகச் சின்னங்களையும் கட்டடங்களையும் கண்காணித்துப் பாதுகாக்கவும் அங்கு நடக்கும் கொண்டாட்டங்களை ஒழுங்கு படுத்தவும் ஒரு சாசுவதக் கமிட்டி ஏற்படுத்தும் சட்டம். இக்கமிட்டியில் மத்திய சர்க்காரால் நியமிக்கப்படும் 3 உத்தியோகஸ்தர்களும் உத்தியோகமில்லாதவர்கள் 3 பேரும், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் 2 முனிசிபல் பிரசிடெண்ட், இவர்கள் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

1951 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

15. சென்னை—கிடங்குச் சட்டம். Madras Warehouses Act-1951 (26-6-1951)

சென்னை ராஜ்யத்தில் கிடங்குகள் ஏற்படுத்தவும் அவைகளை ஒழுங்கு படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. சட்டம் ஏற்பட்டுவிட்டாலும் இது சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல் தான் அமுலுக்குவரும். வாடிக்கைக்காரர்களின் சரக்குகளைப் பந்தோபஸ்தாக வைத்துப் பாதுகாத்துக் கொடுப்பதற்காக எவரும் இச்சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொண்டு கிடங்குகள் (Warehouses) ஏற்படுத்தலாம். சில குறிப்பிட்ட சரக்குகளை வைத்துக்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்படும் கிடங்குகள் தான் இச்சட்டத்திற்குள் வரும். அவையாவன :- (1) நெல், அரிசி, கோதுமை, கோதுமை மாவு, சோளம், கம்பு, ராகி, கடலை, துவரை, உளுந்து இவைகளின் பருப்பு, மற்ற உணவுத் தானியங்கள். (2) எண்ணெய் விதைகள்—அதாவது நிலக்கடலை, எள், கொட்டை முத்து, தேங்காய்க் கொப்பரை உள்பட. (3) பஞ்சு, தென்னைநார், சணல், கத்தாழைநார். (4) தேயிலை. (5) கொட்டைப்பாக்கு. (6) வெல்லம், சர்க்கரை, பனைவெல்லம், ஜீனி. (7) மிளகு, ஏலம், இஞ்சி, மிளகாய், மஞ்சள், மல்லி, வெங்காயர், பூண்டு, புளி. (8) உருளைக் கிழங்கு. ஆனால் இந்த ஜாப்தாவில் வேறு சரக்குகளைச் சேர்க்கவும், எடுக்கவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. சர்க்காரால் குறிப்பிடப்படும் அதிகாரிக்கு மனுப்போட்டு லைசென்சு வாங்கிக் கொண்டவர்களுக்குத்தான் இச்சட்டஷரத்துக்கள் உபயோகிக்கப்படும். இச்சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள ஒரு கிடங்கில் எவரும் சரக்குகளை ஒப்படைத்து, ரசீது வாங்கிக் கொள்ளலாம். இந்த ரசீது எவருக்கும் மாற்றப்படலாம். ரசீது மாற்றப்பட்டு அதை வைத்திருப்பவரே கிடங்கிலிருக்கும் சரக்கின் சொந்தக்காரராவார். லைசென்சு வாங்கவும், அதை ரத்து செய்யவும் கிடங்கு வைத்திருப்பவரின் பொறுப்பைப் பற்றியும் பல நிபந்தனைகள் இருக்கின்றன. இசசட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர, சர்க்கார் தேதி குறிப்பிடும்போது இது விவரமாய் விளக்கப்படும்.

16. சென்னை-சிவில் கோர்ட்டுகள்—கிராமக்கோர்ட்டுகள்—சட்டத்திருத்தம்.

Madras Civil and Village Courts Amendment Act 1951 (3-7-1951). சென்னை ராஜ்யத்திலுள்ள டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் ரூபாய் 5000 வரை பொறுமானமுள்ள அசல் வழக்குகளை ஏற்று விசாரிக்கலாமென்று அதிகாரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் ஜில்லா ஜட்ஜுகளும் சப்ஜட்ஜுகளும் ரூபாய் 2000 வரை மதிப்புள்ள "ஸ்மால்காஸ்" வழக்குகளை ஏற்று விசாரிக்கவும், டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள் ரூபாய் 500 வரை "ஸ்மால்காஸ்" வழக்குகளை ஏற்று விசாரிக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காகச் சென்னை சிவில் கோர்ட் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்துக்கள் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்று சர்க்கார் இனி நிர்ணயம் செய்ய இச்சட்டத்தால் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், கிராமகோர்ட் சட்டப்படி ரூபாய் 50 வரை உள்ள வழக்குகளைத் தான் கிராமக் கோர்ட்டுகள் விசாரிக்கலாம். ஆனால் புதிய கிராம பஞ்சாயத்துச் சட்டப்படி அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் அச்சட்டப்படி கிராமக கோர்ட்டின் அதிகாரத்தையும் பெற்று ரூ. 100 வரை உள்ள வழக்குகளை விசாரிக்கலாம். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 132 ஆவது செக்ஷனில் மேற்கண்ட விதம் புதிய பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர வேறு கிராமக் கோர்ட்டுகளும் இருக்கின்றன. உதாரணமாக, முனிசிபல் டவுன்களுக்குப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் கிடையாது. அங்கிருக்கும் கிராமக் கோர்ட்டுகளின் அதிகாரம் ரூபாய் 50 வரை தான். இதற்காகக் கிராம கோர்ட்டுச் சட்டத்தில் இப்பொழுது ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது குறிப்பிட்ட கிராமக் கோர்ட்டுகள் குறிப்பிட்ட தேதி முதல் ரூபாய் 100 வரை உள்ள வழக்குகளை விசாரிக்கலாமென்று உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வித உத்தரவு பிறப்பித்தவுடன் அந்தந்த உத்தரவில் குறிப்பிடப்படும் கிராமக் கோர்ட்டுகள் ரூபாய் 100 வரை உள்ள வழக்குகளை ஏற்று விசாரிக்கலாம்.

அத்தியாவசிய உத்தியோகங்களில் வேலைநிறுத்தத் தடை — அவசர மத்தியச் சட்டம் (1951)

[The Essential Services - Prevention of Strikes - Ordinance, 1951. இது ஜனாதிபதி அவர்களால் 11—7—1951-ல் பிரகடனம் செய்யப்பட்ட 1951-ஆம் வருடத்திய 1-ஆவது 'ஆர்டினன்ஸ்' என்ற அவசரச்சட்டம். பார்லிமெண்ட் சபை கூடாமலிருக்கும் சமயங்களில் அவசரச் சட்டம் பிறப்பிக்க ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் உண்டு. பார்லிமெண்ட் கூடி ஆறு வாரம் வரைதான் இது அமுலில் இருக்கும். அதற்கு முன்பும் இச்சட்டத்தை பார்லிமெண்ட் மாற்றலாம்.]

இச் சட்டத்தால் சில உத்தியோகங்கள் "அத்தியாவசியமான உத்தியோகங்கள்" (Essential Service) என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன :—

(1) ரயில்வே உத்தியோகங்கள் (2) பொது மோட்டார் போக்குவரத்து ஸ்தாபன உத்தியோகங்கள் (3) துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது, சுற்றுவது, சேர்த்து வைப்பது, கப்பலோட்டுவது, தோணி ஓடும் ஆறுகளை பராமரிப்பது இவ்வித உத்தியோகங்கள். (4) தபால், தந்தி, டெலிபோன் உத்தியோகங்கள் (5) கப்பல்கள், ஆகாயவிமானங்கள், மோட்டார் வண்டி முதலியவை, சைனியத்திற்கு வேண்டிய ஆயுதங்கள் மருந்து முதலியவை, இவைகளை உற்பத்தி செய்வதிலோ, பழுது பார்ப்பதிலோ, சேகரிப்பதிலோ, சோதனை செய்வதிலோ, விநியோகம் செய்வதிலோ ஈடுபட்டிருக்கும் மத்திய சர்க்கார் உத்தியோகங்கள்—இவைதான் "அத்தியாவசியமான உத்தியோகங்கள்." இச் சட்டப்படி மத்திய சர்க்காருக்கு அவசியமாகத் தோன்றும் காலத்தில் அவர்கள் அத்தியாவசிய உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் (strike-ஸ்ட்ரைக்) செய்வதைத் தடை செய்யலாம். தடை உத்தரவு சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்படும். இவ்வுத்தரவு குறிப்பிட்ட பிரதேசங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டில் அமுலில் இருக்கும்படி செய்யலாம். ஆனால் ஆறு மாதங்களுக்கு மேல் அமுலில் இருக்கும்படி ஒரே தடவையில் தடை உத்தரவு செய்யக் கூடாது. இவ்வித உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின், அத்தியாவசிய உத்தியோகங்களில் வேலை பார்ப்பவர்கள் வேலை நிறுத்தம் (ஸ்ட்ரைக்) செய்வது குற்றமாகும். இதற்கு ஆறுமாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூபாய் 200 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். வேலை நிறுத்தம் செய்ததாக சந்தேகிக்கப்படுபவர்களைப் போலீசார் வாரண்டில்லாமலே அரஸ்டு செய்யலாம். இவ்விதம் சட்ட விரோதமாக்கப்பட்ட வேலை நிறுத்தம் செய்யும்படி மற்றவர்களைத் தூண்டி விடுபவர்களுக்கும், தூபம் போடுகிறவர்களுக்கும், அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்கின்றவர்களுக்கும் மூன்று வருடம் வரை சிறை தண்டனை அல்லது ரூபாய் 1000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். வேலை நிறுத்தத்திற்கு தெரிந்தே பணச் செலவு அல்லது பண உதவி செய்பவர்களுக்கும் அதே தண்டனை உண்டு. இந்த அவசரச்சட்ட வாசகங்கள் மற்றச்சட்டங்களுக்கு முரணாய் இருந்தாலும் பாதகமில்லாமல் இதன் வாசகங்களே அமுலில் இருக்கும்.

ஜாகை—வாடகை கட்டுப்பாடு சட்ட விதிகள்

[1949-ஆம் வருடத்திய சென்னை ஜாகை-வாடகை கட்டுப்பாடு சட்டம் (The Madras Buildings Lease and Rent—Control Act 1949). சமீபத்தில் 1951-ஆம் வருடத்திய 8-ஆவது சென்னைச் சட்டத்தால் பல முக்கிய அம்சங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட இச்சட்டம் முழுதும் செக்ஷன் வாரியாக 1951 ஜூன், ஜூலை மாத "வக்கீல்" இதழ்களில் விளக்கப்பட்டன. இப்பொழுது சென்னைச் சர்க்காரால் இச்சட்டத்தைத் தழுவி 'விதிகள்' (Rules) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பழைய விதிகள் ரத்துச் செய்யப்பட்டு அவைகளுக்குப் பதிலாக இப்புது விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவ்விதிகள் 3-7-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II-ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 121-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளின் முக்கிய அம்சங்கள் மட்டில் சுருக்கமாய்க் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன.]

ரூ. 2000 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இவ்விதிகளில் விதி 4, விதி 5 இவைகளை மீறுபவர்களுக்கு ரூபாய் 2000 வரை அபராதம் விதிக்கப்படலாம் என்று 23-ஆவது விதியில் குறிப்பிடப் பட்டிருப்பதால், விதி 4, விதி 5 இவைகள் முதலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

(விதி 4): நோட்டீசுகளில் குறிப்பிடப்பட வேண்டிய விவரங்கள்:

ஜாகை-வாடகை கட்டுப்பாடு சட்டத்தின் செக்ஷன் 3 (1)ன் படி, மாத வாடகை ரூபாய் 25 க்கு அதிகமாக உள்ள வசிப்பதற்கான கட்டடங்களோ (Residential Building) மாத வாடகை ரூபாய் 50-க்கு அதிகமான வசிப்பதற்கல்லாத கட்டடங்களோ (Non-Residential Building) காலியானால் இது விஷயத்தைக் கட்டடத்தின் சொந்தக்காரர் 'நோட்டீசு' மூலம் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். இதற்கு 'Notice of Vacancy' என்று பெயர்.

செக்ஷன் 3 (2) ன் படி, சர்க்காரால் குறிப்பிடப்படும் பட்டணங்களில் குடியிருப்பவர் அக்கட்டடத்தை வேறு ஒருவர் வசம் ஒப்படைத்து விட்டு 3 மாதத்திற்குள் திரும்பி வராவிட்டால் அக்கட்டடம் காலியாகி விட்டதாகப் பாவிக்கப்படும். இது விஷயத்தை மூன்று மாத முடிவிலிருந்து 7 நாட்களுக்குள் குடியிருப்பவர் அதிகாரிக்கு நோட்டீஸ் மூலம் தெரிவிக்க வேண்டும். இது விஷயம் கட்டடக்காரருக்குத் தெரிந்திருந்தாலும் அவரும் அதிகாரிக்கு இதை நோட்டீஸ் மூலம் தெரிவிக்க வேண்டும். செக்ஷன் 3 (7)a-ன்படி, ஒரே ஊரில் இரண்டு அல்லது அதிக கட்டடங்கள் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தாலும், கட்டடங்களின் சொந்தக்காரர் இது விவரத்தை அதிகாரிக்கு நோட்டீஸ் மூலம் தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்டபடி கொடுக்கப்பட வேண்டிய "நோட்டீஸில்" கீழ்க்கண்ட விவரங்கள் இருக்க வேண்டுமென்று இப்பொழுது விதி 4 ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வித "நோட்டீசை" எந்த அதிகாரிக்குக் கொடுக்க வேண்டுமோ அவரிடம் நேரில், அலுவல் நேரங்களில், கொடுக்கலாம். அல்லது அதிகாரிக்கு ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம். அதிகாரியின் கையெழுத்து ரசீது வரும்படி (Acknowledgment due) ரிஜிஸ்டர் செய்யவேண்டும். மேற்கண்ட நோட்டீசுகளில் காண்பிக்கப்படவேண்டிய விவரங்கள்:—

(1) கட்டடத்தின் கதவு எண் (டோர் நம்பர்), பெயர் இருந்தால் பெயர். (2) கட்டடம் இருக்கும் முனிசிபல் வார்டு, அல்லது டிவிஷன், தெரு. (3) வாடகைக்காரர் நோட்டீஸ் கொடுத்தால் கட்டடத்தின் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும்; அல்லது கட்டடக்காரர் நோட்டீஸ் கொடுத்தால் வாடகைக்காரரின் பெயரும் விலாசமும். (4) கட்டடம் வசிப்பதற்கானதா (Residential) அல்லது வசிப்பதற்காகாததா (Non-Residential). (5) சொந்தக்காரரால் கட்டடத்தில் உபயோகப்படுத்தி வர ஏதாவது தட்டுமுட்டுச் சாமான்கள் (furniture) கொடுக்கப்பட்டுள்ளனவா. (6) கட்டடத்தில் இருக்கும் இட வசதி, தோட்ட விஸ்தீர்ணம் சிற்றில்கள் (out-houses) முதலிய விவரங்கள். (7) சொந்தக்காரரிடம் இல்லாத கட்டடங்களில் வாடகைக்காரர் ஒருவரா, பலரா. (8) விளக்கு, தண்ணீர், சுகாதாரம் போன்றவைகள் பற்றிய வசதிகள். (9) வாடகைக்காரர் கொடுக்க வேண்டிய மாத வாடகைத் தொகை.-மேற்கண்ட விவரங்கள் இருக்கவேண்டும். கட்டடம் வாஸ்தவமாகக் காலியான பின்பு தான் 7 நாட்களுக்குள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். காலியாவதற்கு முன்பே நோட்டீஸ் கொடுத்தால் போதாது.

செக்ஷன் 15ன் படி, ஒரு கட்டடத்தின் விவரங்களை அனுப்பும்படி ஒரு கட்டடக்காரரோ, வாடகைக்காரரோ அதிகாரிகளால் கேட்கப்பட்டாலும் அவர்கள் மேலே சொல்லிய விவரங்களைக்கண்டு அவ்வதிகாரிக்கு எழுத வேண்டும்.

(விதி 5) கட்டடத்தின் சொந்தக்காரர் கொடுக்கவேண்டிய ரசீதின் விபரம்.

செக்ஷன் 6 A-ன்படி, வாடகைக்காரர் கொடுக்கும் அட்வான்சு அல்லது வாடகைத் தொகைகளுக்குக் கட்டடத்தின் சொந்தக்காரர் கட்டாயமாக ரசீது கொடுக்கவேண்டும். ரசீதில் கீழ்க்கண்ட விவரங்கள் இருக்கவேண்டும்:—

(1) வாடகைக்காரரின் பெயர். (2) பெற்றுக் கொள்ளப்பட்ட வாடகை அல்லது அட்வான்சு தொகை எவ்வளவு. (3) மாதம் எவ்வளவு வாடகை; எந்த மாத வாடகைக்காக அத்தொகை பெற்றுக்கொள்ளப்படுகிறது. (4) எந்தக் கட்டடத்திற்காக அட்வான்சு அல்லது வாடகை கொடுக்கப்படுகிறதோ அதன் டோர் நம்பர், தெரு முதலிய விவரங்கள்.

(5) கட்டடத்தின் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும்.—இவ்விவரங்கள் ரசிதில் காண்பிக்கப்பட வேண்டும்.

வாடகையை பாங்கியில் கட்டுவது எப்படி.

செக்ஷன் 6 B-ன்படி, வாடகைக்காரருக்கு கட்டடத்தின் சொந்தக்காரரின் விலாசம் தெரியாவிட்டாலும், யாருக்கு வாடகைக் கொடுப்பதென்று சந்தேகம் அல்லது தகராறு ஏற்பட்டாலும் வாடகையைக் கட்டிவரலாமென்றும்; செக்ஷன் 7 A-ன்படி, கண்ட்ரோலரிடமோ அப்பீல் ஜட்ஜ் முன்போ நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் போதே வாடகைத் தொகைகளைக் கட்டிக் கொண்டு வரவேண்டுமென்றும் இருக்கின்றன. இப்பொழுது ஷை வாடகைத் தொகைகளை எங்கே கட்டிவர வேண்டுமென்று விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. சென்னைப் பட்டணத்தில் இருக்கும் கட்டடங்களின் வாடகைத் தொகைகளை சென்னை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலும் மற்ற இடங்களில் இருக்கும் கட்டடங்களுக்கு சமீபத்திலுள்ள சர்க்கார் 'டிரஷரி'யிலும் (கஜானாவிலும்) கட்ட வேண்டும். பணம் கட்டவேண்டிய 'செலான்' டிரஷரி கோடு நமூனா 10ன்படி இருக்கும். செலானில் வாடகைக்காரர் பெயர், விலாசம், கட்டடக்காரர் பெயர், விலாசம், மாத வாடகை, எந்த மாத வாடகை கட்டப்படுகின்றது; கட்டடத்தின் விபரம், எந்த செக்ஷன்படி கட்டப்படுகிறது என்ற விவரங்கள் இருக்கவேண்டும். பாங்கில் கொடுக்கும் ரசீது இரண்டு பாகங்களாக இருக்கும். ஒன்றை கண்ட்ரோலரிடமோ, அப்பீல் கோர்ட்டிலோ தாக்கல் செய்யவேண்டும். அத்துடன் கட்டடக்காரருக்கு நோட்டீஸ் அனுப்பும் படியும் கட்டவேண்டும். எத்தனை நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவேண்டுமோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் நோட்டீஸ்படி அணா 8 வீதம் கணக்குச் செய்து அதற்கு கோர்ட் பீசு ஸ்டாம்பாகப் படி கட்டவேண்டும். [விதி 6]. இப்படிக் கட்டப்பட்ட வாடகைப் பணத்தை வாங்கிக்கொள்ள கட்டடக்காரர் கண்ட்ரோலருக்கு மனுக் கொடுக்கவேண்டும். மனுவுடன் தம் பாத்தியங்களைக் காண்பிக்கும் ஒரு பிரமாணப் பத்திரிகை அல்லது உத்தரவு நகலைத் தாக்கல் செய்யவேண்டும். பிறகு கண்ட்ரோலர் பாங்கிலிருக்கும் தொகையைப் பெற்றுக் கொள்ளலாமென்ற உத்தரவிடுவார். இந்த உத்தரவின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு கண்ட்ரோலர் அல்லது அப்பீல் ஜட்ஜ் இவர்கள் அத்தொகைக்கு 'செக்' கொடுப்பார். [விதி 7]

மனுக்கள்

ஜாகை - வாடகைக் கட்டுப்பாடு சட்டப்படி போடப்படும் எல்லா மனுக்களிலும் மேலே 'நோட்டிசு'களில் காண்பிக்கப்படவேண்டியதாகச் சொல்லப்பட்ட எல்லா விவரங்களும் கண்டிருக்கவேண்டும். கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று கோரும் மனுக்களில் அதற்கான காரணங்களும் காண்பிக்கப்பட வேண்டும். மனுவுடன் எதிர்கட்சிக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்க ஒரு பிரதி வீதம் மனுவின் நகல் பிரதிகள் தாகல் செய்யப்பட வேண்டும். மனுவில் மனுதாரோ அவருடைய வக்கீலோ கையெழுத்திட்டு, ஆபீஸ் நடக்கும் நேரங்களில் மனுவைக் கண்ட்ரோலரிடம் மனுதார், வக்கீல், அல்லது ஏஜண்டு நேரில் கொடுக்கவேண்டும். தபால் (அல்லது தந்தி மூலம்) அனுப்பப்படும் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. [விதி 8] அப்பீல் மனுவும் அவ்விதமே தாகல் செய்யப்பட வேண்டும். அப்பீல் மனுவுடன் கண்ட்ரோலருடைய உத்தரவு நகலும், எத்தனை எதிர் மனுதார்கள் இருக்கிறார்களோ அத்தனை அப்பீல் மனு காப்பிகளும் கொடுக்கவேண்டும். [விதி 11]. ராஜ்ய சர்க்காருக்கு செக்ஷன் 3 (7) e படி கொடுக்கும் அப்பீல்கள் நேரிலும் கொடுக்கப்படலாம்; ரிஜிஸ்டர் தபாலிலும் (அக்னலட்ஜ்மெண்டுடன்) அனுப்பப்படலாம். அத்துடன் கீழ்க்கோர்ட் உத்தரவு நகலும் ஒவ்வொரு எதிர் மனுதாருக்கு ஒரு மனு நகலும் சேர்த்து அனுப்பவேண்டும். [விதி 14]

"எக்ஸ்பார்டி" உத்தரவுகளை மாற்ற மனு; 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும்:—கட்டடக்காரரோ, வாடகைக் காரரோ ஆஜரில் இல்லை என்று அவர்கள் மீது "எக்ஸ்பார்டி"யாக செய்யப்படும் உத்தரவுகளை மாற்ற, உத்தரவு கிடைத்த 15 நாட்களுக்குள் மனுப்போட வேண்டும். சம்மன் வரவில்லை என்ற காரணத்தாலோ, வேறு தகுந்த காரணங்களினாலோ ஆஜராக முடியவில்லை என்று ருசிப்பித்தால் "எக்ஸ்பார்ட்டி" உத்தரவு மாற்றப்பட்டு மறு விசாரணை செய்யப்படும். எதிர் தரப்புக்கு நோட்டீஸ் அனுப்பி பிறகுதான் எக்ஸ்பார்ட்டி உத்தரவை மாற்றலாம். தாம் செய்த எக்ஸ்பார்டி உத்தரவை மாற்றக் கண்ட்ரோலருக்கும் அதிகாரமுண்டு; அப்பீல் ஜட்ஜுக்கும் அதிகாரமுண்டு. [விதிகள் 9, 12]

வாரசுமனு 15 நாட்களில் கொடுக்க வேண்டும்:—மனுதாரரோ, எதிர் மனுதாரரோ இறந்துபோனால், இறந்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வாரசு சேர்க்க மனுப்போட வேண்டும். [விதி 21]

ஒரு "கண்ட்ரோல"ரிடமிருந்து வேறு "கண்ட்ரோல"ருக்கு மாற்றலாம். அப்பீலையும் வேறு கோர்ட்டுக்கு மாற்றலாம்.

ஒரு மனுவை விசாரணை செய்யவேண்டிய "கண்ட்ரோலர்" மனுவில் கண்ட விஷயங்களுக்குச் சம்பந்தமுள்ளவராக இருந்தால் அதை அப்பீல் அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும். அக்காரணத்தாலும் வேறு தகுந்த காரணங்கள் இருந்தாலும் ஒரு கண்ட்ரோலரிடம் இருக்கும் மனுவை அதே அப்பீல் கோர்ட்டுக்குட்பட்ட வேறு கண்ட்ரோலருக்கு மாற்ற அப்பீல் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அதே போல் அக்காரணங்களைக்கொண்டே ஒரு அப்பீல் கோர்ட்டில் நடக்கும் நடவடிக்கையை வேறு அப்பீல் கோர்ட்டுக்கு மாற்ற ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. [விதிகள் 10, 13]

அதிகாரி கட்டடங்களை நேரில் பார்க்கலாம்.

நியாய வாடகையை உயர்த்தவோ குறைக்கவோ மனுப் போடப்பட்டாலும் வேறு மனுக்களிலும், அது சம்பந்தப்பட்ட கட்டடங்களை நேரில் பார்வையிட கண்ட்ரோலருக்கும் அப்பீல் ஜட்ஜுக்கும் அதிகாரமுண்டு. [விதி 15]

நோட்டீசுப்படி:—இச்சட்டப்படி கட்ட வேண்டிய நோட்டீசுப்படி கீழ்க்கண்டபடி கோர்ட் பீசு ஸ்டாம்பு மூலம் கட்டப்பட வேண்டும். மனுதார், எதிர் மனுதார், அல்லது அப்பீல் மனுதார் ஒவ்வொருவருக்கும் படி அணா 8; அதே காலத்தில் சர்வு செய்யப்படவேண்டிய அதே ஊரில் வசிக்கும் அதிகப்படி எண்ணிக்கையுள்ள மனுதார், எதிர் மனுதார் அல்லது அப்பீல் மனுதார் ஒவ்வொருவருக்கும் படி அணா 4 வீதம் கட்டவேண்டும். [விதி 19]

தமிழில்

விற்பனை வரி

[நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த "விற்பனை வரி" என்ற "வக்கீல்" பிரசுரம் 3 இம்மாத "வக்கீல்" சப்ளிமெண்டாக பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. விசேஷ சந்தாதார்களுக்கும் தனி விலை அனுப்பியவர்களுக்கும் தபால் மூலம் சர்டிபிகேட் ஆப் போஸ்டிங்குடன் அனுப்பப் பட்டு வருகின்றன.]

தனிப்பிரதி

விலை ரூபாய் 2—0—0

(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

தனிப்பிரதி தேவையானால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 2-8-0 அனுப்பினால் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்

"வக்கீல்" காரியாலயம்,

தபால் பெட்டி 26, கும்பகோணம் (S.I)

புத்தகம் வரப்பெற்றோம்:—சென்னை சக்ரவர்த்தி பிரசுராலயத்தால் பிரசுரம் செய்யப் பட்டுள்ள "கட்டடங்களை (குத்தகைக்கு விடுவதையும் அவைகளின் வாடகை விஷயமாய்க் கட்டுப்பாடு ஏற்படுத்துவதையும்) குறித்த 1949-ம் வருஷத்திய சென்னபட்டணத்து 25-வது சட்டம் (Madras Buildings (Lease and Rent) Control Act) என்ற புத்தகம் வரப் பெற்றோம். இப்புத்தகத்தை எழுதிய ஆசிரியர்களான திரு. N. C. ராகவாசாரி அட்வகேட் அவர்களும் திரு. N. C. அனந்தாசாரி அட்வகேட் அவர்களும் தமிழ் பொதுமக்களுக்கு ஒரு பேருதவி செய்தவர்கள் ஆவார்கள். மிக சுலப மான தமிழ் நடையில், இது சம்பந்தமான சட்டம் விதிகள், தீர்ப்புகள் எல்லாவற்றையும் ஆசிரியர்கள் மிக நன்றாக விளக்கி இருக்கின் றனர். குறிப்புகள் மிக உபயோகமுள்ளவை. இப் புத்தகத்தின் விலை ரூ. 1-4-0, தான். இப் புத்தகம் கிடைக்குமிடம் "சக்ரவர்த்தி பிரசுராலயம்", 4 அப்பாகண்ணு முதலிதெரு, லட்சுமி புரம் ராயப்பேட்டை மதராஸ் 14.



உலையில்

இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாகவில்லை. சட்டங்கள் இயற்றப்படுமுன், அவ்விஷயத்தைப்பற்றிய பூர்வாங்க நடவடிக்கைகள், அதாவது, கமிட்டியின் சிபார்சுகள், மசோதாக்கள், பொறுக்குக்கமிட்டி ரிப்போர்டுகள், சர்க்கார் அறிக்கைகள் போன்ற விஷயங்களை நேயர்கள் இப்பகுதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சென்னை நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் சிபார்சுகள்.

1950 மே மாதத்தில் சென்னைச் சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்தனர். இக்கமிட்டி நிலச் சீர்திருத்தக் கமிட்டி (Land Revenue Reforms Committee) எனப்படும். ஒன்பது அங்கத்தினர்கள் கொண்டது. சென்னை ராஜ்யத்திலுள்ள நிலங்களைப்பற்றிய பல முக்கிய பிரச்னைகளை ஆராய்ந்து பார்த்துத் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லுமாறு இக்கமிட்டி நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியின் முதல் யாதாஸ்து (ரிப்போர்ட்) 1—7—1951-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. இக்கமிட்டியின் சிபார்சுகளில் சில மிக்க புரட்சிகரமானவை என்றே கருத இடமுண்டு. இச்சிபார்சுகளில் தனி நபரின் சொத்துரிமைகளைப் பாதிக்கக்கூடிய முக்கிய அம்சங்கள் மட்டில் கீழே விளக்கப் பட்டிருக்கின்றன. இச்சிபார்சுகளை எல்லாம் சென்னைச் சர்க்கார் அங்கீகரித்தார்களா இல்லையா என்று இன்னும் அவர்கள் சொல்லவில்லை. ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றி மட்டில் சென்னைச் சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தைப் பொது மக்களுக்குத் தெரிவித்திருக்கின்றனர். அதாவது இக்கமிட்டியின் சிபார்சுகளில் பல ஒரு "குறிப்பிட்ட தேதி" முதல் (crucial date) அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று அக்கமிட்டியார் தெரிவித்திருக்கின்றனர். அதை ஒட்டித்தான் சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றனர். அதாவது, இக் கமிட்டியின் சிபார்சுகளை முடிவாகச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதைத் தழுவி, வருங்காலத்தில் சட்டம் செய்வதனால், அச்சட்டத்தின் ஷரத்துக்களில் பல 1-7-51 முதல் அமுலுக்கு வரும் விதம் சட்டம் அமைக்கப்படும்—என்று மட்டில் பிரகடனம் செய்திருக்கின்றனர். இதனால் ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். ஏனென்றால் சட்டம் இன்னும் வரவில்லை, இப்பொழுது இருக்கும் சட்டத்தை அனுசரித்து ஒருவர் செய்யும் நடவடிக்கைகள் சில வருடங்கள் கழித்து வரும் சட்டத்தால், செல்லாமல் போகலாம் என்ற ஓர் பயம் மட்டில் பொதுமக்கள் மனதில் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, இப்பொழுது ரூ. 250-க்கு மேல் நிலவரி செலுத்தும் ஒரு பட்டாதார் புதிதாகக் கொஞ்சம் நிலம் வாங்கினால் அது இனி வரும் சட்டத்தால் அவர் வாங்கியது செல்லாமல் போகலாம்; அது சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படலாம். அல்லது "சாகுபடி செய்பவர்" அல்லாதவர் இப்பொழுது நில அடமானத்தின் பேரில் ஒருவருக்குக் கடன் கொடுத்தால் அதுவும் செல்லாமல் போகலாம்.—என்பது போல் பயப்பட மட்டில் இடம் இருக்கிறது. நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் யாதாஸ்தில் 1—7—1951 என்ற தேதி குறிப்பிடப்படாவிட்டாலும், இப்பொழுது சர்க்கார் அத்தேதியைக் குறிப்பிட்டிருக்கிறபடியால், கமிட்டியின் சிபார்சுகளில் அத்தேதியைப் பொறுத்தியே கீழே விளக்கப்பட்டிருக்கிறது கவனிக்கவும். கீழ்க்கண்டபடி சட்டம் செய்யப்படவேண்டுமென்று அக்கமிட்டி சிபார்சு செய்திருக்கின்றது.

ஒருவர் எவ்வளவு நிலத்திற்குச் சொந்தக்காரராக இருக்கலாம்?

(1) 1—7—1951-ல் ஒருவர் எவ்வளவு நிலத்திற்குச் சொந்தக்காரராக இருந்தாலும் அதாவது ரூபாய் 250-க்கு மேல் நிலவரி செலுத்தக் கூடிய நிலங்கள் அவருக்குச் சொந்தமாக இருந்தாலும் பாதகமில்லை—அவருடைய நிலங்களின் எந்தப் பாகமும் சர்க்காரால் பறிமுதல் செய்யப்படமாட்டாது.

(2) ஆனால் வருடத்தில் ரூ. 250-க்கு மேல் நிலவரி (assessment) செலுத்தக் கூடியவர்கள் இனி, மேற்கொண்டு விவசாய நிலம் வாங்குவது தடை செய்யப்படும்.

(3) ரூபாய் 250-க்குக் குறைவாக நிலவரி செலுத்தக் கூடியவர்கள், மேற்கொண்டு புதிதாக இனி நிலம் வாங்கலாம். ஆனால் அவர்கள் புதிதாக வாங்கும் நிலத்தின் வரியையும் சேர்த்து ரூபாய் 250-க்கு மேல் நிலவரி ஆகாத அளவுக்குத்தான் புதிய நிலம் வாங்கமுடியும்.

(4) பிரிபடாத குடும்பங்களில் ஒவ்வொரு கிளைக்கும் எவ்வளவு வரி செலுத்தக்கூடிய அதிக நிலம் வைத்துக் கொள்ளலாமென்று ஒரு வரம்பு ஏற்படுத்தப்படும். ஆனால் அக்குடும்பத்தில் எவ்வளவு கிளைகள் இருந்தாலும், ரூ. 1000 வரை வரி கொடுக்கக் கூடிய நிலம்தான் மொத்தம் இருக்கும்படி இனி நிலம் சேர்க்கலாம்.

(5) ஒருவருக்கு வார்சு பாத்தியத்திலோ, உயில் மூலமாகவோ எவ்வளவு நிலம் கிடைத்தாலும் அவர் அவை எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு மேற்கண்ட விதிகள் கிடையாது. அதாவது வார்சு பாத்தியம் அல்லது உயில் மூலம் ஒருவர் அடையும் நிலங்கள் ரூ. 250-க்கு மேல் வரியுள்ளவையாக இருந்தாலும் அவர் அவைகளை வைத்துக் கொள்ளலாம்.

(6) ஆனால் இவ்விதி விலக்கு ஒருவர் இனாம் சாசனத்தின் மூலம் (Gift) அடையும் நிலத்திற்குக் கிடையாது. அதாவது, இனாமாக ஒருவர் அடையும் நிலங்களின் வரியையும் சேர்த்து, ரூ. 250-க்கு மேல் போகாதபடிதான் ஒருவர் இனாம் பெறமுடியும்.

(7) மதஸ்தாபனங்கள், தர்மஸ்தாபனங்கள், கல்விஸ்தாபனங்கள் இவைகள் எவ்வளவு அதிகமான வரியுள்ள நிலங்களையும் இனாமாக அடையலாம். அவர்களுக்கு மட்டில் விதி விலக்கு.

(8) நிலவரி (Assessment) கணக்குச் செய்வதில், விவசாய சம்பந்தமல்லாத காரியங்களுக்கு மட்டில் உபயோகப்படக்கூடிய நிலங்கள்; அங்கீகரிக்கப்பட்ட கால் நடை அபிவிருத்தியாளர்கள் அதற்காக ஒதுக்கி இருக்கும் நிலங்கள் இவைகளின் வரியைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

(9) ரூபாய் 250-க்குமேல் நிலவரி கொடுக்கக் கூடியவர்கள் மேற்கண்ட விதிகளுக்கு முரணாக அதிக நிலம் வாங்கினால், அப்படி அதிகமாக வாங்கப்படும் நிலங்கள் ஜாடாவும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். நிலம் வாங்கியவருக்கு நஷ்ட ஈடும் கொடுக்கப்பட மாட்டாது. இந்நிலங்களை "லாண்டு டிரிபுனல்" என்ற நிலக் கோர்ட்டுகள் பட்டுவாடா செய்வார்கள்.

(10) ரூபாய் 250-க்கு மேல் நிலவரி கொடுக்கக் கூடியவர்கள் 1—7—1951-க்குப் பின் நிலங்களை விற்றால், மறுபடியும் இஷ்டப்படி புதிய நிலம் வாங்க முடியாது. அதாவது இவர்கள் விற்ற நிலம் போக, பாக்கி இருக்கும் நிலங்களின் வரி ரூபாய் 250-க்குள் இருந்தால் மட்டில் ரூ. 250 ஆக வரி வருமளவு உள்ள நிலங்களைத்தான் வாங்க முடியும்.

இனி யார் நிலம் வாங்கலாம்?

1. இனி "சாகுபடி செய்பவர்" (cultivator) அல்லது "விவசாயி" (Agriculturist) தான் புதிதாக நிலம் வாங்க முடியும்.

2. "சாகுபடி செய்பவர்" அல்லது 'விவசாயி' என்றால், நிலங்களைத் தாமாக நேரிலோ தம் குடும்பத்தினரைக்கொண்டோ, கூலியாட்களைக் கொண்டோ சாகுபடி செய்பவர் என்றுதான் அர்த்தம். கூலி என்பது ரொக்கமாகவும் இருக்கலாம்; தானியமாகவும் இருக்கலாம். ஆனால் மகசூலின் ஒரு குறிப்பிட்ட பாகத்தைக் கொடுப்பது கூலியாகாது.

3. "விவசாயி" அல்லது "சாகுபடி செய்பவ"ரின் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும் மைனர்களும் சொத்து வாங்கலாம்.

4. ஒரு பட்டாதார் எந்த நிலங்களைத் தாமே நேரில் சாகுபடி செய்கிறார் என்பதையும் எந்த நிலங்களைக் குத்தகைக்கு விட்டு இருக்கிறார், குத்தகைதார் யார் என்பதையும் "அடங்கல்" என்ற கிராமக் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும்.

5. ஏற்கனவே "விவசாயி" அல்லது "சாகுபடிக்காரரா"க இல்லாதவர்கள் இனி விவசாயிகளாகும் எண்ணத்துடன் கலெக்டரிடம் அனுமதி பெற்று, புதிதாக நிலம் வாங்கலாம். ஆனால் இவர்கள் 3 வருடங்களுக்குள்ளோ, பின்பு கலெக்டரால் அனுமதிக்கப்படும் கெடுவுக்குள்ளோ மேற்சொன்னபடி "விவசாயி" அல்லது "சாகுபடிக்காரர்" ஆகாவிட்டால் அவர் வாங்கிய நிலம் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். சர்க்காரால் அந்நிலங்கள் விற்கப்பட்டு அதன் கிரயத்தொகை மட்டில் அவருக்குக் கொடுக்கப்படும். எப்படியும் அவர், வாங்கிய விலைக்குமேல் அவருக்குக் கொடுக்கப்பட மாட்டாது.

187710.

6. "விவசாயத் தொழிலாளர்கள்" (Agricultural Labourers) எப்பொழுதும் நிலம் வாங்கலாம்.

7. மேற்கண்டபடி புதிய நிலம் வாங்கக் கூடாதென்று தடை செய்யப்பட்டவர்கள் நிலங்களை இனமாகவும் அடையமுடியாது; குத்தகைக்கும் ஒப்புக்கொள்ள முடியாது; இவர்கள் நிலத்தின் பேரில் பெந்தகம், ஒத்தி, அடமானம் முதலியவைகளும் பெற முடியாது.

8. இவ்விதிகளின்படி புதிய நிலம் வாங்கலாயக்குள்ளவர்களும் ரூபாய் 250 வரி கொடுக்கக் கூடிய அளவுக்குத்தான் நிலம் சேர்க்கமுடியும்.

9. இவ்விதிகளுக்கு மாறாக நிலம் அடைபவர்களின் நிலம் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். அவருக்கு நஷ்ட ஈடும் கொடுக்கப்படமாட்டாது.

சொந்தக்காரர் நேரில் எவ்வளவு நிலம் சாகுபடி (பயிர்) செய்யலாம்?

1. 1—7—1951-ல் நிலங்களின் சொந்தக்காரர் எவ்வளவு நிலம் நேரில் சாகுபடி செய்தாலும் அதை இனியும் அப்படியே செய்து வரலாம்.

2. இனி எந்தப் பட்டாதாரும் ரூ. 250 வரை வரி கொடுக்கக்கூடிய அளவு நிலங்களைத்தான் நேரில் சாகுபடி (Personal cultivation) செய்யலாம். அதற்கு மேல் உள்ள நிலங்களை நேரில் சாகுபடி செய்யக்கூடாது.

3. 1—7—1951-ல் அதிகமான நிலங்களை நேரில் சாகுபடி செய்பவர், பிறகு சில நிலங்களைக் குத்தகைக்கு விட்டால், பாக்கி உள்ள அளவு நிலங்களைத்தான் அவர் நேரில் சாகுபடி செய்யலாம். ஆனால் இப்படிக் குத்தகைக்கு விட்டாலும் மறுபடியும் ரூ. 250 வரி கொடுக்கக் கூடிய அளவுவரை உள்ள நிலங்களை எப்பொழுது வேண்டுமானாலும் சொந்தச் சாகுபடிக்கு வைத்துக்கொள்ள உரிமை உண்டு.

4. இவ்விதிகளுக்கு மாறாக அதிக நிலங்களை ஒருவர் சொந்த சாகுபடி செய்தால், அப்படி அதிகமாக இருக்கும் நிலங்கள் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். நஷ்ட ஈடும் கிடைக்காது.

குத்தகைதார்கள்

1. "குத்தகைதார்" (Tenant) என்றால், வேறு ஒருவருக்குச் சொந்தமான நிலத்தைச் சட்ட பூர்வமான பாத்தியத்துடன் சாகுபடி செய்பவர் என்று அர்த்தம். ஆனால் நிலத்தின் சொந்தக்காரரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், ரொக்கமாகவோ, தானியமாகவோ, கூலி பெற்றுக்கொண்டு வேலை செய்பவர்களும் ஒத்திதார்களும், குத்தகைதார்களாக மாட்டார்கள். ஆனால் வார சாகுபடிக்காரர்களும் மலையாளத்தில் வெறும்பட்டந்தார்களும் குத்தகைதார்கள்தான்.

2. திறப்பு நிலங்களில் குத்தகைதார்களுக்கு குத்தகை நிலத்தில் குடிவார பாத்தியம் (Occupancy Rights) ஒன்றும் கிடையாது.

3. ஒரு குத்தகைதார் நிலவரி ரூபாய் 50 வரை கொடுக்கக்கூடிய நிலங்களைத்தான் குத்தகைக்கு வைத்துக் கொள்ள முடியும்.

4. அதற்கு மேல் உள்ள அதிக நிலங்களை ஒருவர் குத்தகைக்கு ஒப்புக்கொண்டால் அப்படி அதிகமாக இருக்கும் நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவருடைய குத்தகை பாத்தியம் ரத்தாகும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கப்படலாம்.

5. குத்தகைதார், நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையின் உச்ச அளவு மட்டில் சட்டத்தால் நிர்ணயிக்கப்படும். இதற்குட்பட்டு குத்தகைதாரும் பட்டாதாரும் குத்தகை விஷயங்களைத் தாங்களே நிர்ணயம் செய்து கொள்ளலாம். இது விஷயமாகத் தகராறுகள் ஏற்பட்டால் "லாண்டு டிரிபுனல்" (Land Tribunal) என்ற விசேஷ நிலக் கோர்ட்டுகள் விசாரித்து முடிவு செய்ய வேண்டும். குத்தகைத் தொகை கிடைக்கவும் இவ் விசேஷ கோர்ட்டுகளில்தான் தாவா செய்யலாம்.

6. குத்தகையின் கெடு குறைந்தது 5 வருடங்கள் இருக்கும். பிறகும் குத்தகைதார் இஷ்டப்பட்டால் புதுப்பித்துக் கொள்ளலாம்.

7. குத்தகைதாரின் கெடு இன்னும் பாக்கி இருந்த போதிலும் அவர் குத்தகை கொடுக்க வேண்டிய கெடுவிலிருந்து ஒரு மாதத்திற்குள் குத்தகை கொடுக்காவிட்டால் அவரை நிலத்தை விட்டு அகற்ற, சர்க்காரால் குறிப்பிடப்படும் அதிகாரியிடம் மனுக் கொடுக்கலாம். அவ்வதிகாரி மறுபடியும் 15 தினங்கள் கெடுக் கொடுக்கலாம். அப்படியும் குத்தகை கொடுக்காதவர்களை நிலத்தை விட்டு அகற்றலாம்.

8. குத்தகைதார் குத்தகை நிலங்களை பாழ் செய்தாலும், விவசாயம் தவிர வேறு உபயோகப் படுத்தினாலும், ஒப்புக்கொண்டதைத் தவிர வேறு விதமான பயிர் சாகுபடி செய்தாலும், உள் குத்தகைக்கு விட்டாலும், குத்தகைதார் இன்சால்வெண்டாக ஆனாலும்—குத்தகைக் கெடு பாக்கி இருந்தாலும் அதற்கு முன்பே குத்தகைதாரை அப்புறப்படுத்தலாம்.



இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

வருமானவரிச் சட்டம் — இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வருமானமுள்ளவர்கள் - சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.

கோர்ட் :- இந்திய சுப்ரீம் கோர்ட்.

நீதிபதிகள் :- நீதிபதிகள் பதஞ்சலி அவர்கள்; முகர்ஜி அவர்கள்; சந்திரசேகரய்யர் அவர்கள்.

ஆதாரம் :- 1951 (1) மதராஸ் லா ஜர்னல் 310.

இந்திய வருமானவரிச் சட்டத்தில் (Income Tax Act) யார் யார் வருமான வரி கொடுக்க வேண்டுமென்றும், எவ்வித வருமானங்களுக்கு வரி விதிக்கப்படுமென்றும் பல நுட்பமான விதிகளும் விதி விலக்குகளும் இருக்கின்றன. பொதுவாகச் சொல்லுமிடத்து:—வருமான வரிச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து (1) இந்தியாவில் ஒருவர் அடையும் எவ்வித வருமானத்திற்கும் வரி உண்டு. இவர் இந்தியப் பிரஜையாக இருந்தாலும் அன்னிய நாட்டின் பிரஜையாக இருந்தாலும், அவர் எங்கே வசித்து வந்தாலும் வருமானம் ஏற்படும் இடம் இந்தியாவுக்குள் இருந்தால், இந்திய வருமான வரி கொடுக்கவேண்டும். (2) "இந்திய வாசி"யாக (Resident in the taxable territories) இருப்பவர் இந்தியாவில் அடையும் வருமானத்திற்கும் வெளி நாடுகளில் அடையும் வருமானத்திற்கும் சேர்த்து இந்திய வருமான வரி கொடுக்கவேண்டும். (3) "இந்திய வாசி" அல்லாதவர் (Non - resident) இந்தியாவில் அடையும் வருமானத்திற்கு மட்டில் வரி கொடுத்தால் போதும். "இந்திய வாசி" யார் என்று வருமான வரிச்சட்டத்தின் செக்ஷன் 4 A-ல் விளக்கப்பட்டிருக்கிறது. அதன் விபரம்:—(1) ஒரு தனி நபராக இருந்தால் அவர் வருமான வருடத்தில் இந்தியாவில் குறைந்தது 182 நாட்களாவது இருந்திருந்தாலும்; அல்லது 182 நாட்கள் இந்தியாவில் வசிக்க ஒரு வாசஸ்தலம் வைத்துக்கொண்டும் எப்பொழுதாவது இந்தியாவுக்கு வந்தாலும்; முந்திய 4 வருடங்களுள் குறைந்தது 365 நாட்களாவது இந்தியாவிலிருந்தவர் வருமானக் கணக்கு வருடத்தில் (தகஸ்மாத்தாகவோ தற்செயலாகவோ இல்லாமல்) இந்தியாவுக்கு வந்திருந்தாலும்; அல்லது வருமானக் கணக்கு வருடத்தில் இந்தியாவுக்கு வந்தவர் இன்னும் குறைந்தது 3 வருடங்களுக்கு இந்தியாவிலேயே தங்கி விடுவோமென்று வருமான வரி அதிகாரிக்குத் தோன்றினாலும்—இவர் "இந்திய வாசி"யாகப் பாவிக்கப்படுவார். (2) வரி விதிக்கப்படவேண்டியவர் தனி நபராக இல்லாமல் ஓர் பிரிபடாத இந்துக் குடும்பமாகவோ, கூட்டு வியாபாரமாகவோ, வேறு வகைச் சங்கமாகவோ இருந்தால், (அதன் விவகாரங்கள் முழுமையும் இந்தியாவிற்கு வெளியே இருக்கும் இடங்களிலிருந்து நிர்வாகமோ மானேஜ்மெண்டோ செய்யப்பட்டாலொழிய) இவைகள் "இந்திய வாசி"யாகவே பாவிக்கப்படும். (3) வரி விதிக்கப்படவேண்டியது ஒரு கம்பெனியாக இருந்தால் அதன் நிர்வாகம் முழுமையும் இந்தியாவிலேயே நடத்தப்பட்டாலும், அல்லது அதற்கு வெளி நாட்டில் வரும் வருமானத்தை விட இந்தியாவில் வரும் வருமானம் அதிகமாக இருந்தாலும் — இக்கம்பெனி "இந்திய வாசி"யாகப் பாவிக்கப்படும். இவ்விதம் வரி கொடுக்கவேண்டியவர்கள் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டு, அவரவருக்குத் தனித் தனி விதிகளைக் கொண்டு அவர் "இந்திய

வாசி"யா அல்லவா என்று நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

இனி இவ்வழக்கைக் கவனிப்போம். திரு. சுப்பைய்யா செட்டியார் ஒரு பிரிபடாத இந்து குடும்பத் தலைவர். அவர் சிலோனிலேயே தம் மனைவி மக்களுடன் வசிப்பவர். 'ஜெனரல் டிரேடிங் கம்பெனி' என்ற பெயரால் அவருக்குக் கொழும்பில் ஒரு வியாபாரமுண்டு. பர்மாவிலும் சைகோனிலும் வியாபாரமுண்டு. இந்தியாவில் கானாடுகாத்தானில் அவருக்கு ஒரு வீடு இருக்கிறது. அதில் அவருடைய தாயார் வசித்து வருகிறாள். இந்தியாவில் நிலங்களும், விஜயபுரத்திலும் நாகபட்டினத்திலும் உள்ள இரண்டு கடைகளில் அவருக்குக் கூட்டும் உண்டு. இவருக்கு 1941 - 42-ல் ஏற்பட்ட வருமானத்திற்கு வரி விதிக்கும் விஷயமாய்த் தான் இவ்வழக்கு ஏற்பட்டது. இவர், "இந்திய வாசி"யாக இருந்தால் அவருடைய இந்திய வருமானத்திற்கும், சிலோன், பர்மா, சைகோன் முதலிய வெளிநாட்டு வருமானத்திற்கும் சேர்த்து வருமான வரி விதிக்கப்பட வேண்டும். "இந்திய வாசி" அல்லாதவராய் இருந்தால் வெளிநாட்டில் இவர் அடையும் வருமானங்களுக்கு இந்தியாவில் வரி கிடையாது; இந்திய வருமானத்திற்கு மட்டில்தான் வரி. இவர் அக்கணக்கு வருடத்தில் 7 தடவை இந்தியாவிற்கு வந்து மொத்தம் இந்தியாவில் 101 நாட்கள் தங்கி இருந்தார். இந்தியாவிலிருக்கும்போது தம் நிலங்களைப் பற்றி ஒரு வழக்கை நேராக இங்கிருந்தே இரண்டு கோர்ட்டுகளில் நடத்தி இருக்கிறார். வருமான வரி அதிகாரிகள் முன்பும் நேரில் ஆஜராகி இருக்கிறார். அக்காலத்தில் இந்தியாவில் இரண்டு கூட்டுக் கடைகளை ஆரம்பித்து, அதன் பிறகு சில நாட்கள் இந்தியாவிலேயே தங்கியும் இருக்கிறார்.

இவர் வருமான வரிச் சட்டப்படி "இந்திய வாசி"யாகப் பாவிக்கப்பட்டு அவருடைய எல்லா வருமானத்திற்கும், வெளிநாட்டு வருமானங்கள் உள்படச் சேர்த்து, இன்கம்டாக்ஸ் ஆபீசரால் வரி விதிக்கப்பட்டது. அதன் பேரில் ஏற்பட்ட அப்பீலில் இன்கம்டாக்ஸ் அசிஸ்டெண்ட் கமிஷனர் அதை உறுதி செய்தார். அதன் பேரில் இன்கம்டாக்ஸ் டிரிபுனலுக்குச் செய்யப்பட்ட அப்பீலில் வரி கொடுக்கவேண்டியவர் "இந்திய வாசி" அல்ல என்று தீர்மானித்தனர். இந்தியாவிலிருக்கும்போது அவர் எவ்வித நிர்வாகமோ மானேஜ்மெண்டோ நடத்தியதாக ஏற்படாதென்று டிரிபுனல் அபிப்பிராயப்பட்டது. அதன்மீது இன்கம்டாக்ஸ் கமிஷனரால் ஹைகோர்ட்டில் விசாரணை நடக்கவேண்டுமென்று மனுக் கொடுக்கப்பட்டது. ஹைகோர்ட்டில் வரி விதிக்கப்பட்டவர் "இந்திய வாசி" தான் என்று உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஹைகோர்ட்டின் தீர்ப்பின்பேரில் வரி விதிக்கப்பட்டவர் இந்திய சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அதில்தான் இத்தீர்ப்பு ஏற்பட்டது.

சுப்ரீம் கோர்ட் உயர் நீதிபதிகள் இது சம்பந்தமான சட்டத்தைச் சுருக்கமாக விளக்கி இருக்கின்றனர். வரி விதிக்கப்பட்டவர் தனி நபரல்ல. ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத் தலைவர். அவ்வித இந்துக் குடும்பம் "இந்திய வாசியா" அல்லவா என்று பார்க்க, ஒரு தனி விதி இருக்கிறது. (மேலே சொல்லப்பட்டவை தான்.) அக்குடும்பத்தின் விஷயங்கள் முழுமையும் வெளி நாட்டிலிருந்தே மானேஜ்மெண்ட் அல்லது நிர்வாகம் செய்யப்பட்டதென்று ருசுப்பித்தாலொழிய அக்குடும்பம் "இந்திய வாசி"யாகத் தான் சட்டத்தில் பாவிக்கப்படும் என்றும்; இவ்விதம் ருசுப்பிக்கவேண்டிய கடமை வரி விதிக்கப்படுபவருடையது தான் என்றும் இவ்வழக்கில், பர்மா, சைகோன், இந்தியா எல்லா இடங்களிலுமுள்ள குடும்ப விஷயங்களைக் கொழும்பிலிருந்தே தான் தாம் நிர்வாகம் செய்ததாகக் கடிதப் போக்கு வரத்தாலோ வேறு வகையிலோ வரி விதிக்கப்பட்டவர் ருசுப்பிக்கவில்லை என்றும் ஆகையால் அவர் தலைவராக இருக்கும் குடும்பம் "இந்திய வாசி" தான் என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, தீர்ப்பளித்தனர். ஆனால் இத்தீர்ப்பு அந்த வருடத்தின் வருமான வரி விதிப்பைப் பற்றித் தான் என்றும், மற்ற வருடங்களில் சட்டப்படிக்கான மேற்கண்ட ருசுவைக் காண்பித்து, வரி விதிக்கப்பட்டவர், தாம் "இந்திய வாசி" அல்ல என்று ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர்.

[குறிப்பு:—"இந்திய வாசி" (Resident in Taxable Territories) என்பவர் உலகில் அடையும் மொத்த வருமானத்திற்கு வருமான வரி கொடுக்கவேண்டும். "இந்திய வாசி அல்லாதவர்" (Non-residents) இந்தியாவில் அடையும் வருமானத்திற்கு மட்டில் தான் வரி கொடுக்கவேண்டும். ஆனால் "இந்திய வாசி அல்லாதவர்"களும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அதாவது (1) இந்தியப் பிரஜை அல்லது பிரிட்டிஷ் பிரஜை என்றும் (2) மற்றவர்கள் - என்றும் பிரிக்கப்பட்டிருந்தனர். முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்திய வருமானத்திற்குத் தான் வரி கொடுக்கவேண்டும்;

ஆனால் அவருடைய மொத்த உலக வருமானத்திற்கு வரி விதிக்கப்பட்டால் எவ்வளவு வரி விதிக்கப்படுவாரோ அதற்குள்ள வீதாசாரப்படி இந்திய வருமானத்திற்கு மட்டில் வரி விதிக்கப்படுவார். இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்திய வருமானத்திற்கு உச்ச விகிதப்படி (Standard of Maximum rate) வரி கொடுக்க வேண்டும் — என்று இதுவரையில் வருமான வரிச்சட்டத்தில் இருந்தது. இவ்வருடம் வருமான வரிச் சட்டத்தில் ஏற்பட்ட திருத்தத்தால் இந்த வித்தியாசம் மறைந்து விட்டது. இனி இந்த இரண்டு வகை அந்நிய நாட்டு வாசிகளும் அவர்களுடைய இந்திய வருமானத்திற்கு உச்ச விகிதப்படி வரி கொடுக்க வேண்டுமென்று சட்டம் திருத்தப்பட்டுள்ளது. ஆனால் முன் இருந்தது போலவே தமக்கு வரி விதித்து வர வேண்டுமென்று கோருபவர்கள் திருத்தச்சட்டத்தில் குறிப்பிட்ட கெடுவுக்குள் வருமான வரி அதிகாரிக்கு இதைத் தெரிவித்து விட வேண்டும்.]

உயிலின் ஷரத்தை அனுசரித்து டிரஸ்டியால் 24 வருடங்கள் கழித்துச் செய்யப்பட்ட இனாம் சாசனம் சரியா?

[சென்னை ஹைகோர்ட்: 1951 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர் — மதராஸ் 374.]

ராமலிங்கம் பிள்ளை 27-9-1917ல் ஒரு உயில் எழுதி வைத்து 1-10-1917ல் இறந்தார். தமமுடைய கடன்களைக் கொடுக்கவும், சில கோயில்களைப் புதுப்பிக்கவும், சில கோயில்களில் பூஜை நடத்தவும் சில உறவினர்களுக்குப் பணம் கொடுக்கவும் ஆண்டியப்ப நாயுடு என்பவரை டிரஸ்டியாக நியமித்தார். "எனக்குப்பின் என் கிருத்தியங்களை என் தாயாதி கரும்பாயிரத்தின் மகன் ஷண்முகசுந்தரம் செய்யும்படி விரும்புகிறேன். ஆகையால் நான் இறந்த பிறகு மேற்கண்ட ஐவேஜியிலிருந்து ஷை ஷண்முகசுந்தரத்தைக் கொண்டு என் கிருத்தியங்களைச் செய்யும்படி டிரஸ்டி ஆண்டியப்ப நாயுடு ஏற்பாடு செய்து, அதற்காக ஷை ஆண்டியப்ப நாயுடுவுக்கு யுக்தமாகத் தோன்றும் சொத்துக்களை அவர் ஷை ஷண்முகசுந்தரத்துக்குக் கொடுக்கவேண்டியது" என்றும் அந்த உயிலில் எழுதி இருந்தார். ராமலிங்கம் பிள்ளை இறந்தவுடன் அவருடைய கிருத்தியங்களை ஷண்முகசுந்தரமே செய்தார். அப்பொழுது அவருக்கு வயது நாலு அல்லது ஐந்துதான் இருக்கும். கிருத்தியம் செய்தாலும் உயில்படி அவருக்கு டிரஸ்டி ஆண்டியப்ப நாயுடு யாதொரு சொத்துக்களையும் எழுதிவைக்காமலே அந்த டிரஸ்டியும் 1934-ல் இறந்து போனார். அவர் இறந்தபின் அவருடைய மகனே உயில்படி டிரஸ்டியானார். இம்மகன் டிரஸ்டியாக வந்த பிறகு 1941-ல் அவர் ஷண்முக சுந்தரத்திற்கு உயிலை அனுசரித்து, 16 ஏகர் 66 செண்டு நிலங்களை இனாம் சாசனம் செய்து கொடுத்தார். உயில் எழுதியவருடைய தாயாதி ஒருவர் இதை ஆட்சேபித்துக் கோர்ட்டில் தாவா செய்தார். உயில்படி எல்லாச் சொத்துக்களும் தர்மத்தைச் சேருமே ஒழிய அச்சொத்துக்களிலிருந்து 16 ஏகர் சொச்சம் நிலத்தை உயில் எழுதி வைத்தவர் இறந்து 24 வருடங்களுக்குப் பின் உயிலை அனுசரித்து இனாம் சாசனம் செய்யப்பட்டது செல்லாதென்று கட்சி சொன்னார். செல்லாதென்பதற்கு இரண்டு காரணங்கள் வாதிக்கப்பட்டன. (1) உயிலின்படி இனாம் சாசனம் செய்யக் கூடியவர் டிரஸ்டி ஆண்டியப்ப நாயுடுதான். அவர் இறந்த பிறகு வேறு ஒருவரும் இனாம் சாசனம் செய்ய முடியாது என்றும் (2) உயிலின்படி கிருத்தியங்களைச் செய்து சொத்துக்களை அடையும் பாத்தியம் காலாவதியாய்ப் போன பிறகு அதற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட இனாம் சாசனம் செல்லாது என்றும் இரண்டு கட்சிகள் சொல்லப்பட்டன. உயர் நீதிபதிகள் இரண்டு கட்சிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. உயிலில் கொடுக்கப்பட்ட உரிமை, அதாவது இனாம் சாசனம் எழுதிக்கொடுக்கும் உரிமை ஆண்டியப்ப நாயுடுக்கு டிரஸ்டி என்ற ஹோதாவில்தான் கொடுக்கப் பட்டதால் அவர் இறந்த பிறகு யார் டிரஸ்டியாக வருகிறார்களோ அவர்களுக்கும் அந்த உரிமை உண்டென்றும்; சொத்தை இனாமாக அடைந்தவர் தம் பாத்தியத்தைக் கோர்ட் மூலம் வற்புறுத்தும் பாத்தியம் காலாவதியாய்ப் போய்விட்டாலும், உயில் எழுதி வைத்தவருடைய எண்ணங்களை அதன்படி டிர்ஸ்டியாக நியமிக்கப்பட்டவர் எவ்வளவு தாமதமாக நிறைவேற்றினாலும் அவர் செய்வது சட்ட விரோதமென்று ஏற்படாதென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவாவைக் கீழ்க் கோர்ட்டில் தள்ளியது சரி என்று ஆமோதித்தனர்.

கரூரில் 'தலாக்' கொடுத்த முஸ்லீம் மீது அவர் மனைவி தஞ்சாவூரில் வழக்குத் தொடரலாமா?

ஆதாரம்: 64 லா விக்லி - 326: சென்னை ஹைகோர்ட்: நீதிபதி கனம் பஞ்சாபகேசய்யர் அவர்கள்.

"விவாகரத்து" என்பது பெரும்பான்மையான இந்துக்களுக்குத்தான் புதிது. தொன்று தொட்ட வழக்கப்படி தாங்களே விவாகரத்துச் செய்து கொள்ள ஓர் பாத்தியம் இருந்தாலொழிய, புதிய சென்னைச் சட்டப்படி இந்து தம்பதிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் விவாகத்தை ரத்துச் செய்யக் கோர்ட்டுக்குத்தான் அதிகாரம். அதுவும் அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில காரணங்கள் இருந்தால் தான் விவாகரத்துச் செய்யக் கோர்ட்டுக்கே அதிகாரம். கிறிஸ்தவர்களும் கோர்ட் மூலம் தான் விவாகரத்துச் செய்து கொள்ளலாம். புருடன் பெண்சாதி இருவரும் சம்மதித்தோ, ஒருவர் மட்டில் இஷ்டப்பட்டோ, இவர்கள் விவாகரத்துச் செய்து கொள்வது முடியாது.

ஆனால் இஸ்லாமியச் சட்டம் வேறு. விவாகரத்துச் செய்து கொள்ளப் பல வழிகள் இருக்கின்றன. மிகச் சுலபமான வழிகள் சில. கோர்ட்டுக்குத் தான் போகவேண்டுமென்ற அவசியமில்லை. விவாகத்தை ரத்துச் செய்து கொள்ளக் காரணங்கள் வேண்டுமென்பதும் இல்லை. கணவன் இஷ்டப்பட்டால், தன் மனைவியைப் பார்த்து, வாய்மொழியாக "உன்னை 'தலாக்' செய்து விட்டேன்" என்று பொருள் அடங்கிய வார்த்தைகளைச் சொன்னால் போதும். சிற்சில நிபந்தனைகளுக்குட்பட்டு இதுவே விவாகரத்தாகும்; 'தலாக்' கொடுப்பதில் பல முறைகள் இருக்கின்றன. 'தலாக்' செய்யும் உரிமை கணவனுக்குத்தான் உண்டு. மேலும் கணவனும் மனைவியும் இருவரும் சம்மதித்தே தங்கள் விவாகத்தை ரத்துச் செய்தும் கொள்ளவும் இஸ்லாமியச் சட்டத்தில் இடமிருக்கிறது. 1939-ஆம் வருடத்திய 8-வது மத்தியச் சட்டம் என்கிற முஸ்லீம் விவாகரத்துச் சட்டப்படி சில சந்தர்ப்பங்களில் புருடனோ, பெண்சாதியோ, விவாக ரத்துக் கோரி, கோர்ட்டுக்கு மனுப் போடவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கில், கரூரில் இருந்த ஓர் முஸ்லீம் தஞ்சாவூரிலிருந்த தம் மனைவியைக் கரூரிலிருந்தபடியே 'தலாக்' செய்து விட்டார்; அதாவது இஸ்லாமியச் சட்டப்படி அதே நிமிஷத்தில் அத் தம்பதிகளின் விவாகம் ரத்தாகி விட்டது. மனைவியைப் பார்த்து அவள் முன்னனிலையில் தான் 'தலாக்' செய்யவேண்டுமென்ற கட்டாயமும் இஸ்லாமியச் சட்டத்தில் இல்லை. மனைவிக்கு அதைத் தெரிவிக்கவேண்டுமென்பது கூட அச்சட்டப்படி இல்லை. இருந்தாலும் தாம் 'தலாக்' செய்து விட்டதாக இவர் கரூரிலிருந்து தஞ்சையிலிருக்கும் தம் மனைவிக்குக் கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தார். கரூரில் இவ்விதம், 'தலாக்' செய்யப்பட்ட மனைவி தம்முடைய நகைகளும், துணிமணிகளும் ஜீவனத்திற்கான தொகையும் தன் புருடனிடமிருந்து தனக்குக் கிடைக்க வேண்டுமென்று, அவர் மீது தஞ்சை கோர்ட்டில் அவள் வழக்குத் தொடர்ந்தாள்; 'தலாக்' ஏற்பட்டது கரூராகையால் இந்தத் தாவா கரூரில் போடவேண்டுமே அன்றி, தஞ்சாவூரில் போடக் கூடாதென்று புருடன் ஒரு முட்டுக்கட்டை போட்டார். இவர் கட்சியைத் தஞ்சை கோர்ட் நிராகரித்தது. சென்னை ஹைகோர்ட்டில் புருடன் செய்த ரிவிஷன் மனுவிலும் இக்கட்சி சரி அல்ல என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். 'தலாக்' ஏற்பட்டது கரூரில் இருந்தாலும், அக்காலத்தில் மனைவி வாசம் செய்து கொண்டிருந்ததும் 'தலாக்' செய்யப்பட்ட விஷயத்தை அறிவிக்கப் பட்டதுமான இடம் தஞ்சாவூரே ஆகையால், தன் பாத்தியங்களைத் தஞ்சாவூரிலேயே வற்புறுத்த அவளுக்கு உரிமை உண்டென்றும், ஆகையால் தஞ்சாவூர் கோர்ட்டில் அவள் வழக்குத் தொடர்ந்தது சரிதான் என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கி வரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

தபால் மூலம் ஜவுளி அனுப்பத் தடை உத்தரவு 1951

மத்திய சர்க்காரால் கீழ்க்கண்ட கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பருத்தியாலான ஜவுளி, நூல் இவைகளை ஒருவரும் 'டெக்ஸ்டைல் கமிஷன'ரின் அனுமதி (பர்மிட்) இன்றி இந்தியாவுக்குள் போஸ்ட்டாபீசு மூலம் அனுப்பக் கூடாதென்று தடை செய்யப்பட்டிருக்கின்றனர். டெக்ஸ்டைல் கமிஷனர் பொதுவாக அனுமதி கொடுக்கலாம்; அப்படியானால் அவ்வனுமதி இந்தியா கெஜட்டில் பிரசுரம செய்யப்படும்; தவிர தனி நபருக்கு மனுவின் பேரில் விசேஷ அனுமதியும் கொடுக்கலாம். போஸ்டல் பார்சல்களுக்கு மேலே சுத்த திணி உபயோகிப்பதை இக்கட்டுப்பாடு உத்தரவு தடை செய்ய இல்லை. உள்ளே ஜவுளி அல்லது நூல் இருப்பதாக சந்தேகப்பட்ட பார்சல்களை எந்தத் தபால் அதிகாரியும் அனுப்பாமல் வைத்து, பிரித்துச் சோதனை செய்யலாம்; உள்ளே இருப்பது ஜவுளி அல்லது நூலாக இருந்தால், அப்பார்சல் எந்தத் தபாலாபீசில் பெற்றுக் கொள்ளப் பட்டதோ அதன் மூலம் அந்த இடத்திற்கான ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். பம்பாய், கல்கத்தா, சென்னை இந்த ஊர்களில் போலீஸ் கமிஷனருக்கு அனுப்பப்படும். மாஜிஸ்ட்ரேட் அல்லது போலீஸ் கமிஷனர் விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

[S. R. O. 755 — 19—6—1951 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம் II-ரூல் சப்ளிமெண்ட் — பக்கம் 113.]

சென்னை ஜீனி வியாபாரிகள் லைசென்சு உத்தரவு (1951)

மத்திய சர்க்காரின் அங்கீகாரத்தின் பேரில் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனரால் இக்கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது:— ராஜ்ய சர்க்காரால் விநியோகம் கட்டுப்படுத்தப் பட்ட ஜீனியில் 'கோட்டா' வாங்கி விற்பனை செய்து வரும் ஜீனி மொத்த வியாபாரிகள் 19—6—1951-க்குப் பின் இக்கட்டுப்பாடு உத்தரவின்படி லைசென்சு பெற்றாலொழிய ஜீனியில் மொத்த வியாபாரம் நடத்தக்கூடாது. இவர்கள் நமூனா I-ன்படி 'லைசென்சு'க்கு மனுப்போட வேண்டும். சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கோ, ஜில்லா கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசருக்கோ, கமிஷனரிடம் அதிகாரம் பெற்ற வேறு அதிகாரிக்கோ மனுப்போட வேண்டும். நமூனா II-ன்படி லைசென்சு கொடுக்கப்படும். அதில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்துத்தான் வியாபாரம் செய்யவேண்டும். 2—9—1949-க்கு முன் ஜீனியில் மொத்த வியாபாரம் செய்யாதவர்களுக்கும், ஜீனி வியாபாரத்தில் அமித லாபம் அடைந்து வந்தவர்களுக்கும், பதுக்கல் செய்து வந்தவர்களுக்கும், ஜீனி விற்க மறுத்து வந்தவர்களுக்கும் வேறு எக்காரணத்தாலும் லைசென்சு பெற யோக்கியதை அற்றவர்களுக்கும் இனி 'லைசென்சு' கொடுக்கப்பட மாட்டாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டில் விதிவிலக்காக லைசென்சு கொடுக்கலாமென்று அதிகாரிக்குத் தோன்றினால் கொடுக்கலாம். லைசென்சு பெற்றவர்கள் நமூனா III-ன்படி ஒவ்வொரு மாதமும் 3 தேதிக்குள் போய்ச் சேரும்படி முந்திய மாதக் கணக்குகளை லைசென்சு கொடுத்த அதிகாரிக்கும் ஜில்லா கலெக்டருக்கும் அனுப்பி வர வேண்டும்.

[19—6—1951 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்-பக்கம் 115]

ரைஸ்மில் லைசென்சு உத்தரவு திருத்தம்.

1951-ஆம் வருடத்திய சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவில், கீழே கண்டபடி சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு வருடமும் லைசென்சு கட்டணம் ரூபாய் 24 கட்டத் தாமதமேற்பட்டால் அவ்வித ரைஸ்மில்காரர்களிடம் அபராதம் ரூபாய் 2 பெற்றுக்கொண்டு தாமதத்தை மன்னித்து, லைசென்சு கொடுக்கச் சிவில் சப்ளை கமிஷனருக்கும், அவரால் இதற்காக நியமிக்கப்படும் உத்தியோகஸ்தருக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டாவது நமூனாவில் ஒரு அனுபந்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

[19—6—1951 - சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 115].

ஷாப் சட்டம்

வார விடுமுறை வேண்டியதில்லை:— ஷாப் சட்டம் செக்ஷன் 11 (1) - ன்படி எல்லாக் கடைகளும் வாரத்தில் ஒரு நாள் மூடப்பட வேண்டுமென்ற விதி கீழே கண்ட சரக்குகளில் மட்டில் வியாபாரம் செய்யும் கடைகளுக்குக் கிடையாதென்று சர்க்காரால் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (1) காய்கறி (2) இறைச்சி (3) மீன் (4) பால், தயிர் வெண்ணெய் (5) ரொட்டி (6) புஷ்பம் (7) மருந்து (8) வைத்திய சம்பந்தமான கருவிகள், பாண்டேஜ் முதலிய (9) பத்திரிகைகள் — இவைகள் ஒன்றிலோ பலவற்றிலோ மட்டில் வியாபாரம் செய்யும் கடைகள் வாரத்தில் ஒரு நாள் மூடவேண்டியதில்லை.

[12-6-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் —பாகம் 1 - பக்கம் 870.]

ஷாப் சட்ட விஸ்தரிப்பு:— ஆரணி, கூடேர், பாபட்லா இந்த முனிசிபாலிடிகளுக்கும் ஷாப்சட்டம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.

[5—6—1951 சென்னைச் சர்க்கார் செஜட் - பாகம் 1 - 835].

இன்று அமுலில் இருக்கும் கட்டுப்பாடு (கண்ட்ரோல்) உத்தரவுகள்.

(சென்ற மாத இதழ் தொடர்ச்சி)

[1951 ஜூலை மாதத்தில் அமுலில் இருக்கும் 'கண்ட்ரோல்' உத்தரவுகள் எவை என்று நேயர்கள் சுலபமாய் தெரிந்து கொள்வதற்காக சர்க்கார் பிரசுரங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது. 1951 ஜூலை மாத 'வக்கீல்' இதழில் சொல்லப்பட்ட கண்ட்ரோல் உத்தரவுகளின் தொடர்ச்சி கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.]

13. மோட்டார் லாரிகள் இரவில் உணவுத் தானியம் எடுத்துப்போகத் தடை உத்தரவு. உணவுத் தானியங்களை (கடலை நிலக்கடலை தவிர) இரவு நேரங்களில் 7 மணிக்கு மேலும் காலை 6 மணிக்குள் எந்த ரஸ்தாவிலும் லாரிகளில் எடுத்துச் செல்லக் கூடாதென்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்யலாம்.

14. சென்னை ரைஸ் மில்கள் லைசென்சு உத்தரவு 1951. The Madras Rice Mills Licensing order 1951. இது 19—4—1951 முதல் அமுலுக்கு வந்தது. ஜில்லா கலெக்டருடைய லைசென்சு பெற்றுத்தான் ரைஸ் மில்கள் நடத்துவது பற்றியது. இக்கட்டுப்பாடு உத்தரவு 1951 "வக்கீல்" ஜூன் இதழில் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

15. சென்னை மரவள்ளிக் கிழங்கு மாவு போக்கு வரத்துக் கட்டுப்பாடு உத்தரவு 1948. The Madras Tapioca Movement order 1948. பர்மிட் இல்லாமல் மரவள்ளிக் கிழங்கு சம்பந்தமான சரக்குகளை மலையாளம், தென்கன்னடம், நீலகிரி, கோயமுத்தூர் இந்த ஜில்லாக்களிலிருந்து வெளியே கொண்டு போவதைத் தடுப்பது. இது ஜவ்வரிசிக்குக்கிடையாது.

16. சென்னை உணவுத்தானியம் பாங்கு அடகுத் தடை உத்தரவு 1950. The Madras Food Grains Restricted pledging with Banks order 1950. கொள்முதல் ஏஜண்டுகள் பிடிக்கும் உணவுத் தானியங்களைப் பாங்குகளில் அடகு வைப்பதை ஒழுங்கு படுத்துவது.

17. சென்னை உணவு தானியக் கொள் முதல் உத்தரவு 1947. (Madras Food Grains Procurement order 1947.) இது இப்பொழுது மலையாளம் ஜில்லாவில் மட்டில் தான் அமுலில் இருக்கின்றது. இதன்படி அறுவடையான எல்லா உணவு தானியமும் கலெக்டருடைய உத்தரவின்படி கொள்முதல் செய்யப்படும்.

18. கொத்துக்கடலை உச்சவிலை நிர்ணயம்:- கடலை முதலிய சம்பந்தமாய் ஏற்பட்ட எல்லா சென்னைக் கட்டுப்பாடு உத்தரவுகளும் ரத்து செய்யப்பட்டாலும் மத்திய சர்க்காரால் 31—3—1951 முதல் கடலையின் விலை 82⅔ பவுண்டு கொண்ட ஒரு மணங்குக்குச் சென்னை ராஜ்யத்தில் உச்சவிலை ரூ. 15 ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மேற்பட்ட விலைக்கு விற்பதும் வாங்குவதும் குற்றம்.

(24—4—1951 - சென்னை சர்க்கார் செஜட் —பாகம் II - பக்கம் 573 பார்க்கவும்.)

19. வெல்லம், ஜீனி போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு 1949. Madras Sugar (Transport Control) order 1949. இதன்படி ஜீனி, வெல்லம், சர்க்கரை இவைகளை ரயில், ரஸ்தா, கடல், நதி முதலிய எவை மூலமாகவும் கொண்டுபோக சிவில் சப்ளை கமிஷனரின் பர்மிட் வேண்டும்.

20. சென்னை ஜீனி வியாபாரிகள் லைசென்சு உத்தரவு 1951. Madras Sugar Dealers Licence order 1951. ஜீனி மொத்த வியாபாரிகள் லைசென்சு வாங்கிக்கொண்டுதான் வியாபாரம் செய்யவேண்டு மென்பதுபற்றி. (இக்கண்ட்ரோல் உத்தரவு இந்த இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.)

21. ஜீனி ஸ்டாக் (சர்க்காருக்கு விற்பனை) உத்தரவு 1949. The Sugar stock — sale to Government of Madras order, 1949. இதன்படி பப்பரமிண்ட் கற்கண்டு, பூரா இவை செய்ய லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும்.

22. மிளகாயுடன் பருத்தி கட்டாய சாகுபடி உத்தரவு 1950. The cotton crop—compulsory growth with chillies—order, 1950. குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் மானவாரி நிலங்களில் மிளகாயுடன் கட்டாயமாகப் பருத்தியும் சாகுபடி செய்ய வற்புறுத்துவது.

23. சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு 1949. The Madras Manure Dealer's Licensing order 1949). எரு வியாபாரிகள் லைசென்சு வாங்கிக்கொண்டு தான் வியாபாரம் செய்ய வேண்டும். இக்கட்டுப்பாடு உத்தரவு 1950 ஜனவரி 'வக்கீல்' இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

24. சென்னை பருத்திக் கட்டுப்பாடு உத்தரவு 1950. The Madras Cotton Control order 1950. பருத்தி விற்பனையைக் கட்டுப்படுத்துவது.

25. சென்னை காதி அபிவிருத்தி உத்தரவு 1949. The Madras Khadi Development order 1949. கதர் நூலிலும் கதர் ஜவுளியிலும் வியாபாரம் செய்ய இதன்படி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். மில் ஜவுளி வியாபாரிகள் கதர் வியாபாரம் செய்வதைத் தடை செய்வது.

26. சிமெண்டு கட்டுப்பாடு உத்தரவு 1949 — Cement control order 1949. சிமெண்ட் விற்பனையைக் கட்டுப்படுத்துவது.

கிராமப் பஞ்சாயத்துச்சட்ட அறிக்கைகள்.

கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக்காலம் 2-1-1952 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

இப்பொழுது கிராமப் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக இருப்பவர்களுடைய பதவிக் காலம் 2-7-1951 வரை தான் இருந்தது. இது சர்க்காரால் 2-1-1952 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

[26-6-1951 - சென்னை - சர்க்கார் கெஜட் - பாகம் I A-பக்கம் 317.]

ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் அதிகாரங்கள்.

சென்னைக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டப்படி சர்க்காருக்குள்ள கீழ்க்கண்ட செக்ஷன்கள் படிகளுள்ள அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரே (Inspector of Municipal Councils and Local Boards) செலுத்தும்படி சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதன்படி இன்ஸ்பெக்டருடைய அதிகாரங்கள்:—செக்ஷன் 5(1) (a) படி ஜனத்தொகை 5000-க்குக் குறையாமலும் வருட வருமானம் ரூ. 10000-க்குக் குறையாமலும் உள்ள பஞ்சாயத்துக்களை முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களாக நிர்ணயம் செய்வது; அதை மாற்றுவது; பஞ்சாயத்தின் தீர்மானம் சட்டப்படி செல்லுமா என்றும் பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குள் இருக்கிறதா என்றும் தீர்மானம் செய்வது - (30); பஞ்சாயத்துச் சிப்பந்தியை ஜில்லா போர்டு அல்லது முனிசிபாலிடிக்கு மாற்றுவது - 34(4); பஞ்சாயத்துக்களைக் கலைப்பது - 48 (1) (3); கலைக்கப்பட்ட பஞ்சாயத்தின் தலைவரின் அதிகாரத்தை நிர்ணயம் செய்வது - 48 (5); கலைத்து மறுபடியும் தேர்தல் செய்யப்பட்ட பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் காலத்தைக் குறிப்பிடுவது - 48 (6); பஞ்சாயத்துக்கும் வேறு ஸ்தலஸ்தாபனத்திற்கு மிடையே தொழில் வரியை பிரித்துக் கொடுப்பது - 65 (5); யாத்திரை ஸ்தலங்களில் நிர்வாகிகளை உத்சவ ஏற்பாடுகளின் செலவுக்குப் பணம் கொடுக்கும்படி உத்தரவிடுவது - 78; ஒரு மார்க்கெட் சொந்த மார்க்கெட்டா என்று தீர்மானிப்பது - 81 (2); 83; ஒரு சந்தை, கிராமச் சந்தையா, ஜில்லாச் சந்தையா என்று நிர்ணயம் செய்து அதன் நிர்வாகத்திற்கு ஏற்பாடு செய்வது - 86; லைசென்சு விஷயமாயும், தொழிற்சாலை விஷயமாயும் உத்தரவிடுவது 93 (3); தலைவர், நிர்வாக அதிகாரி, பஞ்சாயத்து அங்கத்தினர்

இவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர அனுமதி கொடுப்பது - 106; பஞ்சாயத்துக்களுக்குள்ளும் ஒரு பஞ்சாயத்துக்கும் வேறு ஸ்தல ஸ்தாபனங்களுக்குள்ளும் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பது - 130.

அவரவர் அதிகார எல்லைக்குள் உள்ள இரண்டு பஞ்சாயத்துக்களுக்குள் தொழில் வரியைப் பிரித்துக் கொடுக்கும் அதிகாரமும் - 65 (5); இரண்டு பஞ்சாயத்துக்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரமும் - 130; அந்தந்த பிரதேச இன்ஸ்பெக்டர்களுக்கும் (Regional Inspectors) கொடுக்கப்பட்டிருக்கிறது.

[12-6-1951 - சென்னை - சர்க்கார் செஜட் - பாகம் I A - பக்கம் 296]

கிராமப் பஞ்சாயத்துச் சட்ட அதிகாரங்கள்—மாற்றம்.

கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தால் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கு (Inspector of Municipal Councils and Local Boards) இருக்கும் அதிகாரங்களை அவர் வேறு அதிகாரிகளுக்கு மாற்றலாம் என்று செக்ஷன் 127-ல் இருக்கிறது. அதை அனுசரித்து இப்பொழுது கீழே கண்ட அதிகாரிகளுக்கு 'இன்ஸ்பெக்ட'ருடைய அதிகாரங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.

ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கு மாற்றப் பட்ட அதிகாரங்கள்.

(அடிஷனல் பஞ்சாயத்து ஆபீசர்களுக்கும் இதே அதிகாரம் உண்டு.) செக்ஷன் 19 (1) - 21 (6) இவைகளின்படி யோக்கியதாம்சம் இல்லாத அங்கத்தினர்களைக் குறித்தும் பஞ்சாயத்துப் பிரசிடெண்டைக் குறித்தும் கோர்ட்டில் மனுப்போடும்படி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு உத்தரவிடுவது; செக்ஷன் 25 (3)-ன் படி பஞ்சாயத்துத் தலைவர், உப தலைவர் இருவரும் இல்லாதபோது ஒரு அங்கத்தினரைத் தலைவருடைய அலுவல்களைப் பார்க்க நியமிப்பது; செக்ஷன் 34 (5)ன்படி பஞ்சாயத்தில் வேலை செய்யும் சர்க்கார் ஊழியரின் சம்பளம் முதலியவற்றைப் பஞ்சாயத்திலிருந்து வசூல் செய்வது; செக்ஷன் 72-ன்படி - கிராமத்துக்கு வெளியே உள்ள இடங்களில் செலவு செய்யவும்; கிராமத்தில் நடக்கும் கண்காட்சி வேடிக்கைக்களுக்காகவும்; ஏழைகளுக்காகவோ, வைத்தியத்திற்காகவோ செலவு செய்யவும்; வேறு விசேஷ சந்தர்ப்பங்களில் செலவு செய்யவும், ரூபாய் 25-க்கு மேற்படாமல் கொடுக்க அனுமதிப்பது; செக்ஷன் 75-ன்படி - சர்க்காரால் செய்யும் செலவுகளுக்கு ரூபாய் 25-க்கு மேற்படாமல் பஞ்சாயத்தைக் கொடுக்கும்படி உத்தரவிடுவது; செக்ஷன் 79 (c) - ரஸ்தாவுக்கு 20 கஜத்திற்குள் மண் தோண்டுவதை அனுமதிப்பது; செக்ஷன் 87 (b) படி பொது ஸ்தலங்கள் ரோடுகள் இவைகளின் உபயோகத்தை ஒழுங்கு படுத்துவது.

பிரதேச இன்ஸ்பெக்டருக்கு (Regional Inspectors) மாற்றப்பட்ட அதிகாரங்கள்.

செக்ஷன் 3. — புதிய கிராமப் பஞ்சாயத்து அமைப்பது; பல கிராமங்களைச் சேர்ப்பது; ஒரு கிராமத்தை எடுப்பது, சேர்ப்பது முதலியவை; எடுக்கப்பட்ட பஞ்சாயத்தின் சொத்துக்களைப் பற்றி ஏற்பாடு செய்வது. செக்ஷன் 6. — ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது; மாற்றுவது. செக்ஷன் 8. — இன்படி ஷெட்யூல் வகுப்பினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்குவது; செக்ஷன் 9 (1) படி பஞ்சாயத்தை வார்டாகப் பிரித்து, அதற்கு எவ்வளவு அங்கத்தினர்கள் உண்டென்று நிர்ணயம் செய்வது; 10 (3) தாற்காலிகத் தேர்தல் நடத்த உத்தரவிடுவது; 21 (5) தாற்காலிகத் தலைவர் பதவிக்கு ஏற்பாடு செய்வது; 34 (1) பஞ்சாயத்துச் சிப்பந்திகளின் சம்பளம் முதலியவற்றை நிர்ணயம் செய்வது (நிர்வாக அதிகாரி, சானிடரி இன்ஸ்பெக்டர் நீங்கலாக) 34 (4) — ஒரு பஞ்சாயத்தின் சிப்பந்தியை (நிர்வாக அதிகாரி தவிர) தம் ரேஞ்சுக்குள் வேறு பஞ்சாயத்துக்கு மாற்றுவது; 42 (5) பஞ்சாயத்துச் சொத்துக்களைப் பார்வையிடுவது; 42 (6) பொது மக்களுக்கு அவசியமான வசதிகளைச் செய்து கொடுக்கும்படி உத்தரவிடுவது 43 (1) பஞ்சாயத்தின் தீர்மானங்கள் உத்தரவுகள், லைசென்சு அனுமதி இவைகளை நிறுத்தி வைப்பதும், ரத்துச் செய்வதும்; 43 (2) பஞ்சாயத்து அதிகாரியிடம் சமாதானம் வாங்குவது; 44 அவசர காலங்களில் எவ்வித உத்தரவும் செய்வது 46 (1) - பஞ்சாயத்து அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது; 46 (2) பஞ்சாயத்தின் வேலைகளைச் செய்ய ஒருவரை நியமிப்பது; 72 - 75-ன் படி ரூபாய் 25-க்கு மேல் ரூ. 100 வரை செலவிடப் பஞ்சாயத்துக்கு அனுமதி கொடுப்பது; 80 (1) பொது மார்க்கெட்டை மூட உத்தரவிடுவது; 82 (2) (d) - பஞ்சாயத்தார் கொடுக்கும் லைசென்சு மீது அப்பீல் விசாரணை செய்வது. 122 (2) -

பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் பதவி ஏற்க வேண்டிய தேதியை மாற்றுவது.

[3-7-1951 - சென்னை - சர்க்கார் கெஜட் - பாகம் I A - பக்கம் 332.]

கிராமப் பஞ்சாயத்துச் சட்ட அறிக்கைகள்.

1950 - ஆம் வருடத்திய சென்னைக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை உபயோகித்து, சென்னைச் சர்க்காரால் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி அறிக்கைகள் வெளியிடப் பட்டிருக்கின்றன.

அறிக்கை 1. எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் இன்ஸ்பெக்டரே எலெக்ஷன் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அறிக்கை 2. சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாத பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் சம்பளம் முதலியவற்றுக்காகப் பஞ்சாயத்துக் கொடுக்கவேண்டிய தொகைகளைப் பற்றி அறிக்கை 3. பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் இவர்கள் நடத்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றிய விதிகள். அறிக்கை 4. பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் இவர்களுடைய உபகாரச் சம்பளங்களைப் பற்றியது. அறிக்கை 5. இரண்டு அல்லது பல பஞ்சாயத்துக்கள் சேர்ந்து கீழ்க்கண்ட ஸ்தாபனங்களைத் தங்கள் எல்லோருக்கும் பொதுவாக ஏற்படுத்திக் கொள்ளலம். அதாவது:—(1) விவசாயக் கிடங்குகள்; கண்காட்சிச் சாலைகள். (2) விவசாயக் கருவிகளும் யந்திரங்களும் செய்யவும் பழுது பார்க்கவும் தொழிற்சாலை. (3) கால் நடை அபிவிருத்தி ஸ்தாபனம். (4) விறகு மரம் இவைகள் சப்ளைக்காக ஸ்தாபனம். (5) ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்கள். (6) ஆஸ்பத்திரிகள் சுகாதார வாசஸ்தலங்கள். (7) மலேரியா யானைக்கால் வியாதிகளைத் தடுக்கும் ஸ்தாபனங்கள். அறிக்கை 6. வியாபாரப் பயிர்களின் மீது வரி வசூல் செய்வது பற்றி. அறிக்கை 7. பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி சோதனைகள் செய்வது பற்றியது. அறிக்கை 8. பஞ்சாயத்துச் சம்பந்தமான தேர்தல் தகராறுகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதைப் பற்றியது. அறிக்கை 9. பஞ்சாயத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது பற்றியது. அறிக்கை 10. வரி விதிப்பது பற்றியும் அதை வசூல் செய்வது பற்றியும்.

இவைகளில் சில முக்கிய விஷயங்கள் அடுத்து வரும் "வகீல்" இதழ்களில் ஒவ்வொன்றாய் விளக்கி எழுதப்படும்.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். மீதி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது (4 ஏஜண்ட்)களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்,
வாகண்டக்ஹூர் P. O. S. A. Dt.)

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K. R. அப்பாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"உங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆரூட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7—8—0.
வி. பி. பி. தனி.
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P.O. (S. I.)

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

70. **கேள்வி:** (ஞானம் — பம்பாய்) ஒரு கிறிஸ்தவர், தம்மார்க்க முறைப்படி கலியாணம் செய்து சுமார் 9 வருட காலமாகத் தம் பெண்சாதி போன இடம் தெரியாது. அது விஷயமாய் அவர் யாதொரு நடவடிக்கை எடுக்காமலும், இவ்விஷயத்தைத் தெரிவிக்காமலும், மற்றொர் பெண்ணை முறைப்படி கலியாணம் செய்து கொண்டார். இரண்டாவது மனைவிக்குக் குழந்தைகள் இருக்கின்றன. தற்பொழுது (திரும்பி வந்த) மூத்த மனைவி, புருடனைத் தம் வசப்படுத்தி இளையவளை நீக்கவும், இளையவள் மூத்தவளை நீக்கவும் பிரயாசைப்பட்டு வழக்குகள் ஏற்பட்டால் புருடனின் நிலைமை என்ன? ஏமாற்றப்பட்ட இரண்டாமது மனைவியின் நிலைமை என்ன?

பதில்: இரண்டாவது மணம் சட்டப்படி செல்லாது; இருந்தாலும் முதல் மனைவி இறந்து விட்டதாகவே உண்மையில் கணவன் எண்ணி இரண்டாவது மணம் செய்து கொண்டிருந்தால், அது கிரிமினல் குற்றமாகாது; மேலும் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த குழந்தைகளும் சட்ட பூர்வமாய் மணம் நடந்த தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகளுடைய அந்தஸ்து உடையவர்களாவார்கள்.

71. **கேள்வி:** (ரங்கரத்தினம் — ஸ்ரீரங்கம்) கண்ட்ரோல் விலைக்குமேல் தானியங்களை விற்பதை கள்ள மார்க்கெட் போலீஸ் கவனிக்க வேண்டியதுதானு? அல்லது தெரிந்திருந்தும் பாராமுகமாக இருக்கலாமா?

பதில்: கள்ளமார்க்கெட் வியாபாரங்களைக் கண்டுபிடிக்கத்தான் இப்போலீசார் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகையால் அதைக்கண்டு பிடிக்க முடியாமல் இருந்தாலும் இருப்பார்களே ஒழிய, தெரிந்தும் வேண்டுமென்று பாராமுகமாக இருக்கமாட்டார்கள். - என்றுதான் பொது மக்கள் நினைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் கள்ளமார்க்கெட்காரரைத் தெரிந்தும் பிடிக்காமல் பாராமுகமாக இருந்தால், அது வேலியே பயிரை அழிப்பது போலாகும். வேறு வேலி போடவேண்டும்.

72. **கேள்வி:** (நாராயண ராவ்) ஒரு ஜாதியினரின் ஸ்தாபனத்திற்கு டிரஸ்டிகள் இருக்கும் போது அவர்களிடம் எழுத்து மூலம் பவர் வாங்காமல் அந்த ஜாதியினரில் சிலர் அந்த ஸ்தாபனத்திற்காக ஒருவழக்கைத் தொடரலாமா?

பதில்: இவ்விதம் பல நபர்கள் அடங்கிய சமூகத்திற்குப் பிரதி நிதியாகச் சிலர் மட்டில் தாவா தொடர சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் இடமிருக்கிறது. எழுத்து மூலம் பவர் வேண்டியதில்லை. கோர்ட்டின் அனுமதி போதும்.

73. **கேள்வி:** கடலைப் புண்ணுக்கு வியாபாரம் செய்ய லைசென்சு வேண்டுமா? ஒருவர் இது வரை லைசென்சு எடுக்காதிருந்தால், வியாபாரம் செய்ய ஆரம்பித்தது முதல் லைசென்சு எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் சொல்லுவது சரியா? இந்த வருடத்திற்கு எடுத்தால் போதாதா?

பதில்: சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவின்படி (Madras Manure Dealer's Licensing Order 1949) கடலைப் புண்ணாக்கும் 'எரு' என்பதில் அடங்கியதே. இக்கட்டுப்பாடு உத்தரவுப்படி லைசென்சு வாங்கிக்கொண்டு

தான் 'எரு' வியாபாரம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமலிருந்தது குற்றமாகும். அக் குற்றத்தைக் குறித்து கிரிமினல் கோர்ட்டில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக முந்திய வருடங்களுக்கும் 'லைசென்சு' வாங்கிக் கொள்ளும்படி அதிகாரிகள் சொன்னால், அதன் படி லைசென்சு வாங்கிக் கொள்வதே தான் வியாபாரிக்கு லாபகரமானது.

(ஒரு தடவையில் ஒரு இம்பீரியல் மணங்குக்கு மேல் எரு விற்கும் வியாபாரிகளுக்குத்தான் இச்சட்டுப்பாடு உத்தரவு பொருந்தும்.)

74. கேள்வி: பிரிந்து வாழும் கணவன் மனைவி இவர்களில், மனைவி ஜீவனாம்ச தாவா செய்து தீர்ப்பு வாங்கி அதன்படி ஐந்து வருடங்களாக ஜீவனாம்சம் அடைந்து வருகிறாள். புதுச் சட்டப்படி விவாகரத்து கிடைக்குமா? அவ்வாறு விவாகரத்துக்கு மனு செய்து விட்டு, வேறுமணம் செய்து கொள்ளலாமா?

பதில்: சென்னை பலதாரத் தடைச்சட்டப் படி, இது விவாகரத்து செய்து கொள்ளப் போதுமான காரணமல்ல. விவாகரத்து செய்து கொள்ளாமல் வேறு மணம் செய்துகொள்வதும் குற்றமாகும்.

75. கேள்வி: கணவனிடம் ஜீவனாம்சம் வாங்கி பிரிந்து வாழும் மனைவிக்கு இரண்டு மைனர் பெண்கள் அவளுடன் இருக்கிறார்கள். இக்குழந்தைகளுக்கு ஏற்படும் செலவுகளைத் தகப்பன் கொடுக்கக் கடமைப் பட்டவரா? அவர்களுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு உண்டா? இக்குழந்தைகளுக்குச் சரியான கார்டியன் யார்?

பதில்: பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் செலவுகளைத் தகப்பன் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். ஆனால் அப்பெண் குழந்தைகளுக்கு தந்தையின் சொத்தில் பங்கு ஒன்றுமில்லை. குழந்தைகளுக்குத் தகப்பன்தான் சட்ட பூர்வமான கார்டியன்.

76. கேள்வி: (நாராயணசாமி - விருதுநகர்) கணவனை இழந்த பெண் தகப்பனுடன் இருந்து, தானே சம்பாதித்த சொத்துக்களை வைத்து இறந்து விட்டாள். அவளுக்குக் குழந்தைகள் கிடையாது. தாய் தகப்பன் இருக்கிறார்கள். தாய் தகப்பன் அச்சொத்துக்களை தங்கள் மற்ற பெண்களுக்கு எழுதி வைத்தால் செல்லுமா?

பதில்: இறந்த பெண்ணின் திருமணம் 'அங்கீகரிக்கப்பட்ட' முறையில் நடந்திருந்தால் அவளுடைய 'ஸ்ரீதன' சொத்துக்கள் அவள் இறந்தபின் அவளுடைய புருடன் வழி வார்சுகளுக்குப் போகும். 'அங்கீகரிக்கப்படாத' முறையில் அவள் திருமணம் நடந்திருந்தால் அவள் இறந்தபின் அவளுடைய சொத்துக்களுக்கு அவள் தாயும், பிறகு தகப்பனும் வார்சு ஆவார்கள். அப்படியானால் அவர்கள் அச்சொத்துக்களை மற்றப் பெண்களுக்கு எழுதி வைத்தது செல்லும். கலியாண காலத்தில் பெண்ணின் பெற்றோர்களுக்குப் பிரதிப்பிரயோஜனம் கொடுத்துப் பெண் எடுத்து மணம் செய்து கொள்வது "அங்கீகரிக்கப்படாத" முறை விவாகம் எனப்படும்.

77. கேள்வி: (பெரியசாமி — மோகனூர்) ஒரு வீடு தாயார் 'பெயரில்' இருக்கிறது. அவள் பெயரில் கிரயமாகி 4 வருடங்கள் ஆகின்றன. தந்தை இறந்து விட்டார். இவர்களுக்கு மேஜரான ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றனர். அவ்வீட்டில் மகள் பாகமடைய உரிமை இருக்கிறதா? மேஜரான மகனிருக்க தாயுக்கு அவ்வீட்டை விற்கும் உரிமை உண்டா?

பதில்: இக்கேள்விக்குக் குறிப்பாகப் பதில் சொல்வது கஷ்டம். வீடு யாருடையது? தகப்பனுடைய வீடாக இருந்து 'பேர்' இரவலாக மட்டில், தாய் 'பெயரால்' அது வாங்கப்பட்டிருந்தால், தகப்பன் இறந்தவுடன் அவருடைய மனைவியும் அதாவது தாயும் மகனும் வார்சு ஆவார்கள். அப்படியானால் தாயார் தமக்குள்ள பாத்தியத்தை விற்க முடியும். அப்படிக்கில்லாமல் அவ்வீடானது தாயாருக்கே சொந்தமானதாகவே அவள் பெயரிலேயே வாங்கப்பட்டு மிருந்தால் அவள் உயிருடன் இருக்கும் வரை அவள் அதை யாருக்கு வேண்டுமானாலும் தன் இஷ்டப்படி விற்பனை செய்யலாம்; மகன் மகள் இருவருக்கும் அவ்வீட்டில் ஒரு உரிமையுமில்லை.

78. கேள்வி: (குப்பண்ணராவ் — மார்க்கயன் கோட்டை) ஒரு இந்து ஸ்திரீ வார்சு முறையில் தன் தகப்பன் சொத்துக்களை அடைந்திருக்கிறாள். அவளுக்குக் குழந்தைகள் இல்லை. கிட்டிய அனந்தர வார்சுகள் இருக்கின்றனர். அவளுக்கு இச்சொத்துக்களில் தற்போதைய சட்டப்படியே பூர்ண உரிமை (Absolute Estate) கிடைக்க வேண்டுமானால், அவள் கையாள வேண்டிய சட்ட பூர்வமான முறை எது?

பதில்: இப்பொழுது இருக்கும் சட்டப்படி பெண்கள் வார்சு முறையில் அடையும் சொத்துக்கள் அவர்கள் கையிலிருக்கும் வரை ஒருநாளும் அவர்கள் அச்சொத்துக்களுக்குப் பூர்ண உரிமையாளராக மாட்டார்கள். ஆனால் தமக்குப் பூர்ண உரிமை இல்லாவிட்டாலும், சில சந்தர்ப்பங்களில் இவர்கள் பூர்ண உரிமைகளுடன் அடையும்படி வேறு நபர்களுக்கு இச்சொத்துக்

களை மாற்ற முடியும். உதாரணமாக, இச்சொத்துக்களுக்கு யார் முன்பு சொந்தக்காரர்களாக இருந்தார்களோ அவர்கள் பட்ட கடன்களைக் கொடுக்க அவசியம் ஏற்பட்டால் இச்சொத்துக்களை அவள் விற்கலாம். வாங்கியவருக்குப் பூர்ண உரிமை உண்டு. மேலும் வார்சாக சொத்தை அனுபவிக்கும் ஸ்திரீ சட்டப்படி ஒரு சுவீகாரம் செய்து கொள்ளலாம். அச்சுவீகார மகன் அச்சொத்துக்களுக்கு பூர்ண உரிமை உடையவனாக ஆவான்.

79. கேள்வி: (குரு — பவானி) விற்பனை வரிச் சட்டத்தில் நமூனா A 6 பாரத்தில் பாரா 4-ல் "19......மார்ச்சு 31 தேதியோடு முடிவான வருடத்தில் என்னுடைய மொத்த விற்பனைத் தொகை............தேதியன்றுதான் ரூ. 7500 ஆயிற்று" என்று இருக்கிறது. ரூபாய் 7500 ஆனபிறகு ரூபாய் 6 செலுத்தி ரிஜிஸ்டர் செய்து கொள்வதா, அல்லது வியாபாரம் ஆரம்பிக்கு முன்பே கட்டுவதா?

பதில்: வியாபாரம் செய்பவரின் மொத்த வியாப்பாரம் ஒரு வருடத்தில் எந்த மாதத்தில் ரூபாய் 7500-ஐத் தொடுகின்றதோ அம்மாதத்திற்கு அடுத்த மாதம் முடிவதற்குள் A-6 நமூனாப்படி மனுக் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டியது கட்டாயம். அப்படிச் செய்யாவிட்டால் அது குற்றமாகும். ஆனால் ரூபாய் 7500-க்குக் குறைவாக வியாபாரம் செய்தவர்களும் இஷ்டப்பட்டால் நமூனா 7ன்படி மனுக் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம். இது கட்டாயமில்லை. ஒரு தடவை ரிஜிஸ்டர் செய்து கொண்டவர்கள் பின்பு அது ரத்து செய்யப்படும் வரை ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதல் தேதிக்குள் ரூபாய் 6 கட்டணம் செலுத்தி வரவேண்டும்.

(வருடம் என்பது எப்ரல் மாதம் முதல்தேதி முதல் அடுத்த மார்ச்சு மாதம் 31 தேதி முடிய உள்ள வருடம்தான்.)

சதர்ன் ரயில்வே
டவுன் புக்கிங் அண்ட் ஸ்ட்ரீட் டெலிவரி ஆபீஸ்,
43, சாரங்கபாணி கீழவீதி, கும்பகோணம்.

1—8—51 முதல் மேற்படி இடத்தில் பார்சல் அண்ட் குட்ஸ் சாமான்கள் பதிவு செய்து ரசீது தரப்படும். முழு விலாசமிட்டு வரும் பார்சல் & குட்ஸ் சாமான்களை உடனுக்குடன் விலாசத்தில் கொண்டுவந்து கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளப்படும். விபரங்களுக்கு மேற்படி ஆபீசில் விசாரிக்கவும்.

இதுவும் உதவும்

[இப்பகுதியில் வெளியாகும் விவரங்களைப் படிக்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றாவிட்டாலும் என்றைக்காவது இது உங்களுக்கு உபயோகப்படலாம்.]

கூட்டு வியாபாரம்

ஒரு தொழில் அல்லது வியாபாரத்தை நடத்த சட்டப்படிக்கான பல முறைகள் இருக்கின்றன. உதாரணமாக:—(1) ஒருவர் தனியே வியாபாரம் அல்லது தொழில் நடத்தலாம் (2) ஒரு பிரிபடாத பொது இந்து குடும்பம் எந்த வியாபாரத்தையும் தொழிலையும் நடத்தலாம் (3) இரண்டு அல்லது அதிகமான நபர்கள் 'கூட்டு' (Partnership) சேர்ந்து ஒரு வியாபாரத்தை அல்லது தொழிலை நடத்தலாம் (4) பல நபர்கள் சேர்ந்து தங்களை ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனியாகப் (Private Limited Company) பதிவு செய்துகொண்டு வியாபாரம் நடத்தலாம். (5) அல்லது பப்ளிக் கம்பெனியாகச் (Public Company) சேர்ந்து நடத்தலாம் அல்லது (6) கோவாபரேடிவ் சொசைடிகள் என்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் நடத்தலாம்.

மேற்கண்ட ஒவ்வொரு முறைக்கும் பொதுச் சட்டங்களைத் தவிர சில விசேஷ சட்டங்களும் விதிகளும் இருக்கின்றன. இவைகளில் 'கூட்டு' வியாபாரத்தைப் பற்றிய விசேஷ சட்டங்கள் மட்டில் இன்று இங்கே சுருக்கமாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

'கூட்டு' (Partnership) என்றால் என்ன? இரண்டு அல்லது அதிகமான நபர்கள் சேர்ந்து செய்யும் ஒரு வியாபாரம் அல்லது தொழிலில் கிடைக்கும் லாபத்தைப் பிரித்துக் கொள்வதாக அவர்கள் ஒப்பந்தம் (contract) செய்துகொண்டால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு 'கூட்டாளி' (Partner) எனப்படுவர்; அவர்கள் எல்லோரையும் சேர்த்து, 'கூட்டு'கடை அல்லது 'கூட்டு வியாபாரம்' (firm) என்று சொல்வது. அவர்கள் எந்த விலாசத்தை உபயோகித்துக் கூட்டுத் தொழிலை நடத்துகின்றார்களோ அதற்கு, 'கூட்டு விலாசம்' (Firm Name) என்று பெயர். கூட்டு ஒப்பந்தம் என்பது ஒரு தஸ்தவேஜு அல்லது பத்திரத்தின் மூலமாகத்தான் ஏற்படுத்திக்

கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. வாய் மொழியாகவும் கூட்டு ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஆனல் கூட்டுப்பத்திரம் (Partnership Deed) எழுதிக் கொள்வது தான் மிக நலம். கூட்டுப் பத்திரம் ஒன்று எழுதிக் கொண்டாலும், அதை ஸப்ரிஜிஸ்டர் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டு மென்ற கட்டாயமுமில்லை. இஷ்டமிருந்தால் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம்.

ஆனல் எந்தக் கூட்டு வியாபாரம் அல்லது தொழிலும் கூட்டுச் சட்டப்படி (The Partnership Act 1932) நியமிக்கப்பட்டுள்ள 'ரிஜிஸ்ட்ரார் ஆப் பர்ம்ஸ்' (Registrar of Firms) என்ற அதிகாரியிடம் 'பதிவு' (ரிஜிஸ்டர்) செய்யப்பட வேண்டும். இது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. கூட்டு வியாபாரம் நடத்துப வர்கள் இவ்விதியை நன்ருகக் கவனிக்க வேண்டும். ஏனென்ருல் இதன்படி 'ரிஜிஸ்டர்' செய்யப்படாத கூட்டுக்கள் தங்களுக்கு வர வேண்டிய தொகைகளை வசூல் செய்யக் கோர்ட்டில் தாவா செய்ய முடியாது; வேறு எவ்வித மான பரிகாரங்கள் கிடைக்கவும் வழக்குகள் தொடர முடியாது. ரிஜிஸ்டர் செய்யப்படாத கூட்டின் கூட்டாளி எவரும் அக்கூட்டின் மீதோ, மற்றக் கூட்டாளிகள் மீதோ கூட்டு ஒப்பந்தச் சம்பந்தமான தாவாக்களும் தொடர முடியாது. உதாரணமாக 'ரிஜிஸ்ட'ராகாத ஒரு கூட்டுக் கடையில் வேறு ஒருவர் பத்து வரவு செய்து வருகிருர். ரூ. 1000 பாக்கி ஏற்படு கிறது. அதை வசூல் செய்யக் கூட்டாளிகள் அவர்மீது கோர்ட்டில் தாவா செய்கிருர்கள். 87710 இக்கூட்டு, (ரிஜிஸ்டர் ஆப் பர்ம்ஸ் என்ற அதிகாரியிடம்) பதிவு செய்யப்படாத ஒரே காரணத்தால், தாவா முதலெடுப்பிலேயே தள்ளப்படும். ஆனல் இந்தப் பொது விதிக்குச் சில விதி விலக்குகள் உண்டு. அவையாவன:—

(1) கூட்டு ரிஜிஸ்டராகா விட்டாலும் கூட்டைக் கலைக்க வேண்டுமென்ருே, கலைக்கப் பட்ட கூட்டின் கணக்குகளைப் பார்க்க வேண்டு மென்ருே, கலைக்கப் பட்டுள்ள கூட்டின் சொத்துக்களை வசூல் செய்ய வேண்டுமென்ருே தாவா செய்யலாம்.

(2) கூட்டு ரிஜிஸ்டராகா விட்டாலும் ஒரு கூட்டாளி கடன் கொடுக்கச் சக்தியற்றவராகப் (இன்சால்வெண்டாகப்) போய்விட்டால் அவருடைய சொத்துக்களை நிர்வாகம் செய்யும் கோர்ட் அல்லது ரிசீவருக்கு எவ்விதமான தாவாவும் செய்ய உரிமை உண்டு.

(3) கூட்டு ரிஜிஸ்டராகா விட்டாலும் ரூ. 100-க்கு மேற்படாத ஸ்மால்காஸ் வியாஜ்யங் கள் போடலாம்.

ஒரு 'கூட்டை' ரிஜிஸ்டர் செய்யவேண்டு மென்ற மனுவை, அதற்காக உள்ள நமூனப்படி எழுதி ரிஜிஸ்ட்ராருக்கு (Registrar of firms, Madras) என்ற விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பியோ, நேரில் கொடுத்தோ அதற்கான கட்டணமும் கட்டினல் அக்கூட்டு, 'பதிவு' 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ளப்படும். நமூன இல்லாவிட்டால் மேற்கண்ட அதிகாரிக்கு எழுதி ஞலும் நமூன அனுப்பப்படும். மனுவில் கூட்டு விலாசம் கூட்டு வியாபாரம் நடக்கும் இடங்கள், கூட்டாளியின் பெயர் விலாசம், அவரவர் கூட்டில் சேர்ந்த தேதி, மற்ற ஒப்பந்தங்களின் விபரம் இவைகள் இருக்கும். ஒரு 'கூட்டை' ரிஜிஸ்டர் செய்து கொண்டதற்கு அதிகார பூர்வமான நகலும் வாங்கிக்கொள்ளலாம். கூட்டாளிகள் விலகும் போதும், புதுக் கூட்டாளிகள் சேரும் போதும் அது விபரங்களை ரிஜிஸ்ட்ராருக்குத் தெரிவிக்கவேண்டும்.

கூட்டாளிகளின் எண்ணிக்கை:—லேவா தேவித் தொழில் (Banking) நடத்த 10 நபர் களுக்கு மேலும், மற்ற எவ்விதத் தொழில் அல்லது வியாபாரம் நடத்த 20 நபர்களுக்கு மேலும், இருந்தால் அவர்கள் இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி (Indian Companies Act - 1913) தங்களை ஒரு 'கம்பெனியாக'ப் பதிவு செய்து கொள்ளவேண்டும். அப்படிக் கில்லாமல் வெறும் கூட்டாக (Partnership) இருந்து தொழில் நடத்துவது சட்ட விரோதம்; மேலும் அது குற்றமாகும்; ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்விதம் சட்ட விரோதமாகத் தொழில் நடத்தும் கூட்டுக்கள் தாவா செய்தாலும் தள்ளுபடியாகும். இந்த விதி பிரிபடாத இந்து குடும்பம் நடத்தும் தொழிலுக்குக் கிடையாது.

ஸ்டாம்பு:—கூட்டுப்பத்திரம் (Instrument of Partnership) ஒன்று எழுதிக்கொண்டால் கூட்டின் மொத்த முதல் தொகை ரூ. 500-க்கு மேற்படாமலிருந்தால் அதற்கு ரூபாய் 10 ஸ்டாம்பு வேண்டும்; கூட்டின் முதல் தொகை அதற்கு மேலிருந்தால் அதற்கு ஸ்டாம்பு ரூ. 40. கூட்டைக் கலைத்து எழுதிக்கொள்ளும் பத்திரங் களுக்கு (Dissolution of Partnership) ஸ்டாம்பு ரூ. 20.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

சென்னை 600 013

விஜயா ஒளஷத சாலை,
1, சக்கரபாணிகோயில் வடக்குவீதி, கும்பகோணம்.

சாஸ்பட்ட நோய்களுக்கும், கடுமையான நோய்களுக்கும், முக்கியமாக குஷ்டம், வெள்ளை குஷ்டம், க்ஷயரோகம், சுவாசகாசம், நீரிழிவு, தாது பலஹீனம், சக்குவான் இருமல், மூலம், காக்காய்வலிப்பு முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட சிகிச்சை செய்யப்படும்.

1. பூர்ண சந்திரோதய மகரத்வஜம்
க்ஷயம், தாதுபலஹீனம் முதலிய எல்லா வியாதிகளுக்கும் ஒப்பற்றது.
ஒரு விராகனிடை ரூ. 30-0-0

2. விஜயா காயகல்பம்
சிறந்த யௌவனமளிக்கும் டானிக் உணவு. 15 நாள் உபயோகம்.
1 பௌண்டு பாட்டில் ரூ. 4-0-0

3. ஜீவாக்னிரஸம்
ஜலதோஷம், ஜுரம், ஜன்னி முதலியவைகளுக்குச் சிறந்தது.
20 மாத்திரை பாட்டில் 1க்கு ரூ. 1-0-0

4. சக்குவான் மருந்து
சக்குவானுக்கும் இருமலுக்கும் கைகண்ட மருந்து. 1 தோலா ரூ. 1-0-0

5. விஜயா ஆயின்டுமெண்டு
அக்கி, கரப்பான், சொறி, சிரங்கு, புண், புரை, காயம் முதலியவைகளுக்கு சிறந்தது. பாட்டில் 1க்கு ரூ. 0-12-0

6. சவனப்ராசம்
7. வில்வாதி லேகியம்
1 சேர் டின் ரூ. 3-8-0
½ சேர் டின் ரூ. 1-12-0

8. அஸ்வகந்தி ரஸாயனம்
9. ஸௌபாக்ய சுண்டி.
1 சேர் டின் ரூ. 3-0-0
½ சேர் டின் ரூ. 1-8-0

10. தாமரைத் தைலம்
11. குமரித் தைலம்
12. கருஞ்செம்பைத்தைலம்
13. ப்ருங்காமலக தைலம்
5 oz. பாட்டில் ரூ. 1-8-0

14. க்ஷீரபலாத் தைலம்
2 oz. பாட்டில் ரூ. 1-2-0

நவீன செந்தூரங்கள், பஸ்பங்கள் லேகியங்கள் தைலங்கள், க்ருதங்கள் முதலியவை சிறந்த ஆயுர்வேத முறைப்படி தயார்செய்து சரஸமான விலைக்குக் கொடுக்கப்படும்

ஏஜண்டுகள் தேவை

ஆயுர்வேத ரத்னம்
R. ராமானுஜாச்சாரியார்,
Regd. Medical Practitioner. (Indian System).

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷ்மீபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TER.